
Registered as a Newspaper in Ceylon ★ ★ விலைசதம் 10

# ஈழநாடு
THE EELA NADU

தேசீயதினசரி National Tamil Daily
மலர் 8 (20-8-66) இதழ் 191
பராபவ ஆவணி 4 ஜ: அவ்வ 3 சனிக்கிழமை




### கிரிக்கெட் டெஸ்ட்

ஒவல் (லண்டன்) ஆக. 19

இங்கிலாந்துக்கும் மேற்கிந்தியாவுக்கும் இடையே இங்கு நடைபெறும் கிரிக்கெட் 5வது இறுதி டெஸ்ட்டின் இரண்டாவது தினத்தில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்துக் கோஷ்டி இன்று அபாரமாக விளையாடியது. ஆட்டம் முடிந்தபோது இங்கிலாந்து 7 விக்கெட் நஷ்டத்துக்கு 330 ரன்கள் எடுத்திருந்தது.

ஸ்கோர் விபரம்

மேற்கிந்தியா: 268
இங்கிலாந்து: 330

# இனத்துவேஷ சூழ்நிலை இன்னும் மறையவில்லை

## அவசரகால நிலைமை நீடிப்பதற்கு பிரதமர் கூறிய காரணம்

### ஜனநாயக ஆட்சியில் சிறுபான்மை மக்களின் நிலைபற்றியும் விளக்கம்

கொழும்பு, செவ்வாய்

"பெரும்பான்மை மக்களின் ஆதரவுடன் நடைபெறுவதுதான் ஜனநாயக ஆட்சி. ஆனால் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த சிங்கள 'கொய்கம' ஜாதிக்காரர் மற்றவர்கள் எல்லோரையும் ஆளவேண்டுமென்று நினைப்பது தவறு. சகல மக்களும் ஜாதி, சமய, இனப்பாகுபாடின்றி சமவுரிமைகளுடன் ஜனநாயக ஆட்சியில் பங்குகொள்வதற்கு வசதியிருக்கவேண்டும்."

இவ்வாறு பிரதமமந்திரி திரு. டட்லி சேனநாயக்கா இன்று ஜனப்பிரதிநிதிகள் சபையில் கூறினார்.

வரவு-செலவுத் திட்டத்தில் தமது அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டுள்ள மானிய மீதான விவாதததுக்குப் பிரதமர் பதிலளித்துப் பேசினார்.

வரவு-செலவுத் திட்டம் இன்று மீண்டும் கமிட்டி நிலையில் பரிசிலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரதமமந்திரி திரு. டட்லி சேனநாயக்கா எதிர்க்கட்சியினரின் குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளிக்கையில் பெரும்பான்மைச் சிங்களவர்கள் சிறுபான்மையோரை ஆளவேண்டுமென்பது தவறு. ஜனநாயக ஆட்சியில்சகல மனிதருக்கும் சமவுரிமையுண்டுஎன்றுகூறினார்

#### அவசரகாலம்

அவசரகால நிலை அமுலில் இருப்பது பற்றிப் பிரஸ்தாபித்துப் பிரதமர் பேசுகையில் இனக்கலவரங்களைத் தூண்டக்கூடிய சூழ்நிலைகள் இன்னும் மறைந்துவிடவில்லை. அதனால் அவசரகால நிலையைத் தொடர்ந்து வைத்திருக்க வேண்டியது அவசியமாகுமென்று கூறினார்.

இனக் கலவரங்கள் உண்டாகக்கூடிய சூழ்நிலைகள் ஏற்பட்டதால் அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து அரசாங்கத்தை வீழ்த்துவதற்கான சதிமுயற்சியும் கண்டுபிடிக்கப்பட்டது அதனால் அவசரகாலநிலை மேலும் நீடிக்க நேர்ந்தது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இனத்துவேஷங்களைத் தூண்டிவிடக்கூடிய சக்திகள் இன்னும் ஒய்ந்துவிடவில்லை என்று கூறிய பிரதமமந்திரி பத்திரிகை விஷயத்தில் அவசரகால சட்டம் சற்று தளர்த்தப்பட்டிருப்பதாகவும் ஆனால் 'எத்த' பத்திரிகை விஷயத்தில் அவை அமுலில் இருப்பதாக

(8-ம் பக்கம்பார்க்க)

## தமிழரசு வாலிப முன்னணி 11-வது மாநில மகாநாடு

### மாவிட்டபுரத்தில் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், வெள்ளி

தமிழரசுக்கட்சியின் 11-வது மாநில மகாநாடு நாளை பிற்பகல் 2 மணிக்கு மாவிட்டபுரத்தில் விஷயாலோசனைக் கூட்டத்துடன் ஆரம்பமாகிறது. இம்மாதம் 23-ந் திகதிவரை நடைபெறும் மகாநாட்டு நிகழ்ச்சிகள் வருமாறு:

நாளை நிகழ்ச்சியான விஷயாலோசனைக் கூட்டம் வாலிபமுன்னணித் தலைவரும், மட்டக்களப்பு எம். பி. யுமான திரு. செ. இராசதுரை தலைமையில் வாலிபமுன்னணி பணியகத்தில் நடைபெறும்.

#### இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள்

22-ம் திகதி காலை 9-30 மணிக்கு மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் முன்றலில் திருமலை நடராசன் அரங்கில் திரு. செ. இராசதுரை தலைமையில் இரண்டாம்நாள் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும். இதனையடுத்து ஐயாவு பிரான்சிஸ் அரங்கில் திரு. சி. க. சபாபதி தலைமையில் தொழிலாளர்மகாநாடு நடைபெறும். பல தொழிற்சங்கங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் சொற்பொழிவாற்றுவார். பிரதம பேச்சாளராக பட்டிருப்பு எம். பி. திரு. எஸ். எம். இராசமாணிக்கம் கலந்துகொள்வார்.

பிற்பகல் 2 மணிக்கு விபுலானந்தஅரங்கில் இலக்கிய மகாநாடு இடம்பெறும். இலக்கிய மகாநாட்டின் முதல் நிகழ்ச்சி கவிஞர் அம்பி தலைமையில் கவியரங்கு நடக்கும். கவிஞர்கள் நீலாவணன், காசி ஆனந்தன், வி. கந்தவனம், தில்லைச்சிவன், சத்தியசீலன் ஆகியோர் பங்குபற்றுவார்.

இதனையடுத்து இலக்கியப் பேரவைகிளிநொச்சி எம். பி பண்டிதர் கா. பொ. இரத்தினம் தலைமையில் நடைபெறும். தமிழக [illegible]

(5-ம் பக்கம் பார்க்க)

நகைகளுக்கு
யப்பான்
ஜுவலர்ஸ்
64, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 518
தந்தி: "யப்பான்"

## பணம் பற்றுக்குறையால் மாணவர் தற்கொலை!

### சவ அடக்கத்துக்கு சக மாணவர் நிதி சேகரித்தனராம்

கொழும்பு, வெள்ளி

பணம்பற்றுக் குறை காரணமாக இலங்கை பல்கலைக்கழக மாணவரொருவர் சமீபத்தில் தற்கொலை புரிந்து கொண்டிருக்கின்றார்.

இந்த மாணவரின் சவ அடக்கத்துக்கான பணத்தை சகமாணவர் சேகரித்தனர்.

உலகபல்கலைக்கழகசேவைகள் இலங்கைதேசிய கவுன்சில் தலைவர் டாக்டர் எச். பி. ஏ. விஜேதுங்க இந்தத் தகவலைப் பேராதனையில் வெளியிட்டார்.

உலகபல்கலைக்கழகசேவை இயக்கம் நிதிசேகரித்து பணத் தட்டுப்பாட்டுக்குள்ளாகும் மாணவர்களுக்கு உதவிவருகின்றது. இந்த இயக்கம் நடைமுறையில் இருந்திருந்தால் அந்தமாணவரின் உயிரைக் காப்பாற்றியிருக்கமுடியும் என்று டாக்டர் விஜயதுங்க கூறினார்.

இந்த இயக்கத்துக்கு நிதி சேர்க்கும் விஷயத்தில் ஒரு சிகரட்டை வழங்கினாலும் பெரிய உதவியாக இருக்கும் என்று டாக்டர் விஜயதுங்க கூறினார்.

## பௌத்தரை நசுக்க சோடித்த வழக்கு!

### சதிவழக்கில் எதிரி தரப்பு வழக்கறிஞர் கருத்து

கொழும்பு, வெள்ளி

இராணுவத்திலுள்ள பௌத்தர்களைத் தொல்லைப்படுத்தும் நோக்கத்துடனேயே இச்சதிவழக்குத் தொடரப்பட்டுள்ளதென்றும் இந்த நோக்கத்துக்கமையவே எதிரிகள்மீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருப்பதாகவும் சதிவழக்கில் முதல் எதிரி ஞானசீக தேரோவின் சார்பில் ஆஜரான கனிஷ்ட வழக்கறிஞர் இன்று ஒருகட்டத்தில் குறிப்பிட்டார்.

சதிவழக்கு விசாரணையில் இரண்டாவது சாட்சியான கோர்ப்பரல் துவான்சாலி நாலவன் சரவை முதல் எதிரியின் கனிஷ்ட வழக்கறிஞர் குறுக்குவிசாரணை செய்கையில் இவ்வழக்கில் நாலாம் எதிரியான மேஜர் ஜெனரல் உடுகமதான் இலங்கை ராணுவத்தில் முதல் பௌத்த தளபதி என்பது உமக்குத் தெரியுமா என்று கேட்டார். இதற்கு சாட்சி "ஆம்" என்று பதிலளித்தார். முன்னைய சதிவழக்கில் ஒருவரைத் தவிர எதிரிகள் எல்லோரும் பௌத்தர்களல்லாதவர்களென்பது உமக்குத் தெரியுமாவென சாட்சியைக் கேட்டார். அதற்கும் சாட்சி 'ஆம்' எனப் பதிலளித்தார்.

ராணுவத்தில் பௌத்தர்களை நசுக்க முனைந்தவர்களின் கையாளா நீர் என்றும் வழக்கறிஞர் சாட்சியைக் கேட்டார்.

தேசிய அரசாங்கத்தைக் கவிழ்க்கச் சதிசெய்ததாக ஞானசீகதேரோ, முன்னாள் ராணுவ தளபதி மேஜர் ஜெனரல் ரிச்சர்ட் உடுகம உட்பட 23 பேர் மீது குற்றம்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு இன்று காலை மீண்டும் கொழும்பு பிரதம மாஜிஸ்டிரேட் திரு. பீ. ஜி. எஸ் டேவிட் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபொழுது நேற்று சாட்சியமளித்த இராணுவ கோப்ரல் துவான் சாலி நாலவன்சா தொடர்ந்து எதிர்தரப்பு வழக்கறிஞர்களால் குறுக்குவிசாரணைசெய்யப்பட்டார்.

ராணுவத் திலிருக்கையில் மூன்று தடவை திருட்டுக் குற்றத்துக்காக தண்டனை பெற்றதாக துவான்சாலி குறுக்குவிசாரணையில் ஒப்புக்கொண்டார்.

செம்புக்கம்பி திருடியதாகவும்ஒன்றுமுள்ளுக்கம்பி திருடியதாக மற்றொன்றும் பெட்ரோல் திருடிய வேறு ஒரு குற்றச்சாட்டுமாக மூன்று குற்றங்கள் மீது தண்டனை பெற்றதாக

(5-ம் பக்கம் பார்க்க)

## தேசிய சுவீப் முடிவுகள்

திஸமகாராம, வெள்ளி

நேற்று இங்கு இழுக்கப்பட்ட தேசிய சுவீப் முடிவுகள் வருமாறு.

இவை உறுதிப் படுத்தப்படவேண்டியவை.

1-வது பரிசு
32 W 0507 — ரூ 100,000

2-வது பரிசு
08 M 0142 — ரூ 40,000

3-வது பரிசு
25 H 0237 — ரூ 10,000

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## தேவை

நெசவாளர்

கைத்தறி நெசவு நிலையத்திற்கு திறமை வாய்ந்த ஆண், பெண் நெசவாளர் தேவை. 17-8-66 தொடக்கம் 1-9-66 வரை நிலையத்திற்கு நேரில் வரவும். சி. நவரத்தினம், சக்தி கைத்தறி நெசவு சாலை, டச்சு வீதி, சாவகச்சேரி. 849

இளைஞர்கள்

புதினத்தாள்கள், சுவீப் சீட்டுகள் விநியோகம் செய்யவும் அச்சகவேலை பழகவும் ஏழாந்தரம் வரையில் படித்த இளைஞர்கள் தேவை. இரண்டு நன்னடத்தைப் பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். வடலங்கா புத்தகசாலை பருத்தித்துறை. 870

## திருமண அழைப்பு

அருளையா – ஜீவமலர்

நிகழும் 1966-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22-ந் திகதி (22-8-66) காலை 9 மணிக்கு மூருங்கன் மெதடிஸ்ததேவாலயத்தில் திருமணம் நடைபெறும். அத்தருணம் உறவினரையும், நண்பர்களையும் வந்து ஆசீர்வதித்தேகுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம். வரவேற்பு உபசாரம் மணமகள் இல்லத்தில் நடைபெறும். தங்கள் நல்வரவை நாடும் திருமதி லூசி அருளையா மணமகனின் தாயார், துன்னாலை தெற்கு கரவெட்டி. எஸ். கே. அரசரட்னமும் பாரியாரும், மணமகளின் பெற்றோர். (தலைமை ஆசிரியர்) 'அரசபவனம்' செட்டிகுளம். 865

## வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய சுற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பசி பூரணானந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

## விற்பனைக்கு

கார்:

ஏ 40-கேம்பிறிஜ்- ஈ என் 6000 சிறிகை. 20.ம், 21-ம் திகதிகளில் காலை 7 மணி தொடக்கம் மாலை, 5 மணி வரையும் பார்வையிடலாம். க. சண்முகதாசன், பெரிய அரசடி, கண்டிறோட், சாவகச்சேரி. 862

காணி:

சாவகச்சேரி, மறவன் புலவு தண்டிகைப் பள்ளம் வயல் பரப்பு 31 விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: திருமதி. த. முருகேசபிள்ளை ஆசிரியை, புலோலி தெற்கு, பருத்தித்துறையில் விசாரிக்கவும். 832

பரிசுபெற்றவையும், வனப்பும், ஆரோக்கியமும், நல்ல இனமும் கலப்புமுள்ள 50 கால்நடைகளும் (பால் மாடுகள் கேப்பைகள். எருதுகள், வண்டிமாடுகள், கொழும்பு ஆடிவேல் ரதமிழுக்கும் பொருத்தமான ஒங்கோல் இனக்காளைகள்) 70 ஆடுகளும் (வளர்ப்புக்கு மிக உகந்த நேர்த்தியான ஜம்னாபாரி கலப்பு இனங்கள்) 23-8-66 செவ்வாய்க்கிழமை (போயா தினம்) வதுமுன்னகெதரையிலுள்ள நாகதோட்டத்தில் ஏலத்தில் விற்கப்படும். யக்கில, மகந்துர, வெலிபன்ன, கஹாமுல்ல, உடுபத்தல ஆகிய இடங்களிலிருந்து றோட் மூலம் வரலாம்.

B. W. D லம்பேட் & கோ, ஏலவிற்பனையாளர், தரகர், மதிப்பாளர், நீர்கொழும்பு. தொலைபேசி: 362. 845

பாடப்புத்தகம்

கணிதத்தில் கடந்த தவணைப் பரீட்சையில் உங்கள் பிள்ளைகள் குறைவான புள்ளிகள் பெற்றிருந்தால் அவ்வவ் வகுப்புகட்கு திரு. வே. சிவக்கொழுந்து மனக்கணிதங்களை வாங்கி விடுதலை நாட்களில் பயிலச் செய்யுங்கள். தற்போது 8-ம் வகுப்பு மனக்கணிதம், ஜி. ஸி. ஈ. வகுப்புக்கும் ஓரளவு ஏற்றது. பிரசுரம் வடலங்கா புத்தகசாலை, பருத்தித்துறை. 869

இப்பொழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீகிருஷ்ணா (திருமலை)

ரி. எம். சௌந்தரராஜன்

பி. எஸ். சரோஜா

எம். ஆர். ராதா, மனோகர், சாரதா, லட்சுமி, ராஜம் மற்றும் பலர் நடித்த

அருணகிரிநாதர்

இசை: காலஞ்சென்ற ஜி. ராமநாதன், ரி. ஆர். பாப்பா

டைரக்ஷன்: ராமண்ணா.


# மணியான விழா

'கற்றலில் கேட்டலே இன்பம்' என்ற ஒரு அமுத மொழியின் அருமையை நேற்று முன் தினம் தான் நன் அறிந்துகொள்ளக் கூடியதாக இருந்தது.

யாழ்ப்பாணம் வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் தமிழ்நாட்டின் பெருமைமிக்க அறிஞர் திரு. கி. வா. ஜகந்நாதனுக்கு ஒரு மணிவிழா எடுத்தார்கள் யாழ்ப்பாணத்துப் பெருமக்கள். இந்த மணிவிழாவில்தான், கேட்டல் எவ்வளவு இன்பம் பயக்கத்தக்கது என்பதை உணர்ந்து கொள்ளமுடிந்தது.

நீதிசிரோமணி, பண்டிதமணி, வேதாகமமணி, ஆசிரியமணி, இலக்கியமணிகள் அத்தோடு ஒரு பெண்மணி இப்படி எத்தனையோ நவமான அறிவுமணிகள் ஒரு மணிவிழாவில் கலந்து உரையாற்றுவதென்றால்?...

புண்படுத்தாத, பண்பான பண்பட்ட கன்னித்தமிழ்ப் பாராட்டுக்களில் சபையிலிருந்துகொண்டிருந்த ஒவ்வொருவரும் நனைந்து நனைந்து திக்குமுக்காடிக் கொண்டிருக்கையில் கி. வா. ஜ. மணிவிழாவைக் கண்டு களித்துக் கேட்டு இரசிக்கவந்திருந்த பெருமக்கள் கூட்டம் சிந்தை அள்ளும் தமிழ் செழுந்தேனை மாந்தி மாந்தி மெய்மறந்து கொண்டிருந்தனர்.

விழாவுக்குத் தலைமைதாங்கிய பண்டிதமணியின் பாயாசப்பேச்சு, இலக்கணவரம்புக்குட்பட்ட இனிமையான கனிவான தமிழ் அவர் உடல்நிலை சற்று குறைந்துவிட்டாலும் ஓயாது வழிந்தோடும் தீந்தமிழை அன்று கேட்கக் கொடுத்துவைத்தவர்கள் கொடுத்துவைத்தவர்கள் தான்.

'அரசர்கள் தான், புலவர், கல்விமான்களைத் தம்சபையில் ஏற்றுப்பொன்னாடை போர்த்துவர். ஆனால் நான் நீதியுடன் சம்பந்தப்பட்டவன் நீதியைச் செலுத்தும் கடமைப்பாடுடையநான் ஒரு அரசனல்ல. ஆயினும் நான் மக்கள் சார்பில் கி. வா. ஜ. வுக்குப் பொன்னாடை போர்த்துவதில் பெருமைப்படுகிறேன்' நீதியரசர் திரு. ஸ்ரீஸ்கந்தராஜா திரு. கி. வா. ஜ. வுக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கையில் இவ்விதம் சிறான வார்த்தைகளால் சிறப்புச் செய்தார்.

அதிபர் திரு. ச. அம்பிகைபாகனின் ஆழமான கருத்து செறிந்த அறிவுரை 'பணிந்து நடப்பதில் இளம்சந்ததியினர் கி. வா. ஜ. வைப் பின்பற்ற வேண்டும்' என்ற வேண்டுகோள் நினைவில் இருத்திக்கொள்ளவேண்டிய அறிவுரைதான்.

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி மாதர்பெருமையைத் துலக்கிவிட்டார் கி. வா. ஜ. வின் இளமை குலையாத் தோற்றத்துக்கு அவர் கொடுத்த விளக்கம் இதனை எடுத்துக்காட்டியது. கி. வா. ஜ மாண்பு கொண்ட ஒரு மனைவியை அடைந்துள்ளதாலேயே இத்தனை இளமையுடன் பொலிவுறுகிறார் என்பதுதான் அந்த விளக்கம்.

திரு. பொன். முத்துக்குமாரன், கி. வா ஜ வே கூறியதுபோல் பொன்னையும் முத்துக்களையும்சேர்த்து சேர்த்து ஆரம் ஆரமாக ரீங்காரம் செய்தார். அந்த முத்துக்களை எல்லாம் சேர்ப்பதற்காக முத்துக்குமாரன் தமிழ் இலக்கிய உலகின் எங்கெல்லாமோ சென்றுவந்தார். நமும் சென்று வந்தோம். 'இந்தமாதிரி இடங்களுக்கு எம்மை அடிக்கடி கூட்டிச்செல்ல வேண்டும்' என்று கூட்டத்தில் கேட்ட ஒரு குரல் இப்பொதும் எதிரொலிக்கிறது.

'நதிப் பெருக்கைப்போற் கவிதை, நற்றமிழின் இன்ப ஒலி, பாரதியின் கவிதைகளை இப்படித்தான் பாரதிதாசன் கூறினர். திரு. பொன் கிருஷ்ணபிள்ளை பேசுகையில் இந்த நினைவுவந்தது. தாவும் மந்தியைக்கூடத் தமிழால் அழகுபடுத்தினர். பனையை யானையாக்கினர். அழகான உவமைகள் அங்கே ஆழமான கருத்துக்கள். சிரித்துப் பேசி சிந்தைக்கு நல்ல செம்மையான விருந்துவைத்துவிட்டார் அவர்.

விழா நடந்துகொண்டிருந்த மண்டபம் தெய்வ சந்நிதானம்போல் காட்சிமாறியது. வேதாகம வித்தகர் ஸ்ரீ சீதாராமசாஸ்திரி உரைநிகழ்த்தத் தொடங்கினர். சைவத்துக்கும், தமிழுக்கும் எத்தனை பிணைப்பு இருக்கிறதென்பதைத் தன் அறிவுத் துணைகொண்டு தெளிவித்தார். தெளியவைத்தார். பற்றற்ற உள்ளங்களில்கூட ஒருபற்று ஏற்பட்டிருக்கும்.

மட்டுநகர் மக்களின் அன்பைத் திரட்டி திரு. க. நடராஜன், அவர்கள் சார்பில் அன்பளிப்பு வழங்கினர்.

செம்மையும், சிறப்பும், சீரும் நிறைந்த செந்தமிழால் போர்த்தப்பட்டிருந்த ஜகந்நாதன் நன்றிதெரிவிக்க எழுந்தார்.

எல்லையற்ற வார்த்தைகளால் தன் அடக்கமான சுபாவத்தை வெளிப்படுத்திய பேரறிஞர் கி. வா. ஜ. தொடர்ந்தார்.

''அறிவாலே உயர்ந்த பண்டிதமணி தலைமைதாங்கும் விழா. அதனாலேதான் இது மணி விழா.

இது எனக்கெடுத்த விழாவா? இல்லை. அன்புக்கெடுத்த விழா. அன்பு விழுமா? விழாது திருவருள் தான் உங்கள் மத்தியில் என்னைக்கொண்டுவந்து சேர்த்துள்ளது. எனக்கு இத்தனை பெருமையை அளிக்கச் செய்தது அந்த இறைவன் தான். இந்தப் புகழ் எல்லாம் என்னை இறுமாப்படையச்செய்யவில்லை. உங்கள் அளவற்ற அன்புக்குத் தலைசாய்த்து கொள்கிறேன்.

அன்பேமயமான தமிழால் யாரையும் புண்படுத்தக்கூடாது. புண்படுத்துவதற்கா அந்த தமிழ் பிறந்தது? எனவே தமிழால் அன்பு கொள்வோம்''

செல்வி ஜகதாம்பிகையின் தேவாரம் விழாவை நிறைவுபடுத்தியது.

கண்ணும் காதும் மனமும் நிறைந்தது!

—க. கணேசலிங்கம்

## தேர்த்திருவிழா ஏற்பாடுகள்

கொழும்பு, வியாழன்

யட்டிநுவர பகுதியைச் சேர்ந்த மொரக முல்லை என்ற இடத்திலுள்ள ஸ்ரீ கதிரேசன் கோவில் வருடாந்த தேர்த்திருவிழாவைப் பிரமாண்டமான முறையில் கொண்டாடுவதற்கான விரிவான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

இந்த விழா இம்மாதம் 25-ம் திகதி நடைபெறும். புராதன சரித்திரப் பாரம்பரியத்தைக்கொண்ட இந்த கோவில் விழாவுக்கு நாட்டின் பல பாகங்களிலிருந்தும் பக்தர்கள் திரள்வார்கள். 24-ம் திகதி இரவு நடைபெறவிருக்கும் காவடியும் தீமிதிப்பும் முக்கிய நிகழ்ச்சிகளாக இடம்பெறும். இக்கோவில் திருப்பணிகளை வெற்றிகரமாக முடிய ஐரோப்பியதோட்டத்துரைமாரும் உதவிபுரிகின்றனர்.

## வேலியே பயிரை மேய்கின்றது

கொழும்பு, வெள்ளி

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கடமையாற்றும் பல பொலிஸ், சுங்க இலாகா உத்தியோகத்தர்களைப் பற்றி இரகசிய பொலிசாரான சி. ஐ. டி லைலஞ்சக் கொமிஷனரிடம் விரைவில் புகார்செய்யுமெனத் தெரிகிறது.

பொறுப்பான பதவிகள் வகிக்கும் இவ் உத்தியோகத்தர்களுக்கு, வருடா வருடம் மத்திய கிழக்குக்கு ஒரு கோடி ரூபாய் பெறுமதியான தேயிலையைக் கள்ளக்கடத்தல் செய்யும் சர்வதேசக் கொள்ளைக் கூட்டமொன்று லைலஞ்சம் கொடுத்து வந்திருப்பதாகத் தெரிகிறது.

## சமாதானநீதவான் வீட்டில் திருட்டு

உடுப்பிட்டி, வெள்ளி

கரவெட்டி மேற்கு சமாதான நீதவான் திரு வீ. வே. சின்னையாவின் இல்லத்தில் துணிகரத் திருட்டு ஒன்று நடைபெற்றுள்ளது. வீட்டுக்கிணற்றடியிலிருந்து ரூபா 2000 பெறுமதியான தண்ணீர் இறைக்கும் இயந்திரம்தான் திருட்டுப்போய்விட்டது. இது சம்பந்தமாகப் பருத்தித்துறைப்பொலிஸார் ஸ்தலத்தில்கால்ரேகைகளைப் பதிவுசெய்துள்ளனர். தொடர்ந்து புலன்விசாரணை நடைபெறுகிறது.


நியூ காலிங்கன் (இணுவில்)

தினசரி 6-30, 9-30 மணி

விடுமுறை தினங்களில் 2-30 மணி

ரஞ்சன் - வீரப்பா நடித்த

மின்னல் வீரன்

ராஜா (யாழ்ப்பாணம்)

தினசரி 4-45, 7-00, 9-45

போயா தினங்களில் 4 காட்சிகள்

THE FLESH AND THE FIENDS

(ADULTS ONLY)

மகாத்மா தியேட்டர் (நெல்லியடி)

தினசரி 6-30, 9-30 மணி

எம். ஜி. ஆர். - ஜெயலலிதா முதலியோர் நடித்த

ஆயிரத்தில் ஒருவன்

(ஈஸ்ட்மன் கலர்)

REGAL—JAFFNA

NOW SHOWING

Alain Delon

Ann Margret

in

ONCE A THIEF

(MGM Presentation) (Adults Only)

The Jaffna Academy

(Institute for Academic & Technical Education)

Reopens Wednesday 7th. September 956

Admission Cards on 5th & 6th September

The following additional courses will be provided from the next term.

1. General Arts qualifying Examination - Ceylon University 1967.
2. Teachers Certificate Examination 1967.
3 Law College Entrance Examination 1967.

Applications for the above courses in Forms available from the Office must reach the Office before 26th, August 1966.

Director.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# "நெருக்கடியான நிலையில் விலகவேண்டாம்"

## யுதாண்டுக்கு 60-க்கும் அதிகமான நாடுகள் கோரிக்கை

### தீர்க்கமான முடிவை செப்டம்பரில் வெளியிடுவார்

நியுயோர்க், ஆக. 19

**ஐக்கியநாடுகள் பொதுக்காரியதரிசி பதவியிலிருந்து விலகிக்கொள்ள வேண்டாமென்று அறுபதுக்குமதிகமான நாடுகள் யுதாண்டுக்கு கோரிக்கை விடுத்துள்ளன.**

இருபத்தைந்துக்கு அதிகமான ஆசிய நாடுகளும் முப்பதிஆறு ஆபிரிக்க நாடுகளும் இக் கோரிக்கையை யுதாண்டுக்குச் சமர்ப்பித்துள்ளன. லத்தீன் அமெரிக்க நாடுகளும் இதேவிதமான கோரிக்கையை யுதாண்டுக்கு அனுப்பியுள்ளன.



ஐக்கிய நாடுகள் பொதுக் காரியதரிசியாகவிருக்கும் யுதாண்டின் ஐந்து வருட பதவிக்காலம் நவம்பர் மாதம் 3-ம் திகதியுடன் காலாவதியாகிறது.

ஐ நா. காரியதரிசி பதவிக்கான தேர்தலுக்கு மீண்டும் நிற்பதா இல்லையா என்பதை யுதாண்ட் இது வரை அறிவிக்காதபோதிலும் தனது தீர்க்கமான முடிவை அடுத்த மாதம் முதல் திகதி வெளியிடுவார் என்று ஐ. நா. வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நேற்று இருபத்தைந்து ஆசிய நாடுகளின் சார்பில் ஆறு அங்கத்தவர்களைக் கொண்ட தூதுகோஷ்டியொன்று யுதாண்டைச் சந்தித்து, ஐ நா. காரியதரிசி பதவியிலிருந்து விலக வேண்டாமென்று கோரிக்கை விடுத்தது.

உலகவிவகாரங்களில் இக்கட்டான நிலைமை தோன்றியிருக்கும் நேரத்தில் பதவியிலிருந்துராஜினாமா செய்து கொள்வது உலக சமாதானத்துக்கு நன்மைபயக்காது என்று இத் தூது கோஷ்டியினர்யுதாண்டிடம் தெரிவித்தனர்.

லத்தீன் அமெரிக்க நாடுகளும், ஆபிரிக்க நாடுகளும் ஏற்கனவே யுதாண்டுக்கு இப்படியான கோரிக்கைகள் அனுப்பியுள்ளன,

யுதாண்டின் பதவிகுறித்து ஐ. நா. அதிகாரி ஒருவர் நேற்றுத் தெரிவிக்கையில், யுதாண்டின் தீர்மானம் பற்றி உடனடியாக எதுவுமே கூறமுடியாதென்றும் செப்டம்பர் மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் வெளியாகும் முடிவுகள் எல்லாம் வெறும் ஹேஸ்யமாகவே இருக்குமென்றும் கூறினர்.

## களவுக் குற்றத்துக்கு மரணதண்டனை

மாஸ்கோ, ஆக. 18

கள்ளச்சந்தைக்காரர் ஒருவர் அரசாங்கத்திடமிருந்து 370,000 ரூபிள் பெறுமதியான பொருட்களைக் களவாடிய குற்றத்துக்காக மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளார்.

—

## லண்டன் பொலிஸ் கொலை

### இரண்டாவது நபரும் சிக்கினர்

கிளாஸ்கோ, (ஸ்கொட்லாந்து) ஆக. 19

லண்டன் பொலிஸ் கொலையில் சம்பந்தப்பட்ட மூன்று குற்றவாளிகளில் இரண்டாமவரும் இப்போது கைப்பற்றப்பட்டுள்ளார்.

இவர் கிளாஸ்கோ திடீர் சோதனைப் பகுதியினரால் அமைதியாகக் கைதுசெய்யப்பட்டார். ஆயுதந்தரித்திருப்பதுடன் அபாயகரமானவருமாக இருப்பாரெனப் பொலிசார் எச்சரித்திருந்தபோதும், 37 வயதான ஜோன்டடியைக்கைது செய்தபோது அவர் எவ்வித எதிர்ப்பும் காட்டாது அமைதியாகவே நடந்து கொண்டார்.

ஏற்கனவே, கொலைகாரர் மூவரில் ஜோன் எட்வாட் விற்னி எனபவர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இப்பொழுது மூன்றுவது நபரான 30 வயது ஹரி மோரிஸ் ரொபேட்ஸைப் பொலிசார் வலைபோட்டுத் தேடி வருகின்றனர்.

இறந்த மூன்று பொலிஸ்காரர்களின் குடும்ப நிவாரண நிதி இன்று 5,000 பவுனைத்தாண்டிவிட்டது எனப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

(பி. டி. ஸி.)

—

## பிளாஸ்டிக் குண்டு வெடித்து 28 பேர் மாண்டனர்

ஹியூ, (தென்வியட்னும்) ஆக. 19

தென் வியட்னமில் இரண்டாவது கோரமான பயங்கரத் தாக்குதல், நேற்று ஹியூ நகரின் மத்தியில் ஏற்பட்டது.

இங்குள்ள சிற்றுண்டிச் சாலையொன்றில் பிளாஸ்டிக் குண்டொன்று வெடித்ததில் இருபத்திவெட்டு வியட்னமியர் கொல்லப்பட்டன[ர்]. நூற்றுக்கு மதிகமானவர்க[ள்] காயமடைந்தனர்.

வியட்காங் இயரே இ[க்] குண்டை வெடித்திருக்கி[ன்]றனரென்று அமெரி[க்க] இராணுவ அதிகாரியொ[ரு]வர் தெரிவித்தார்.

தென் வியட்னும்

## தேர்தலைத் தடுப்பதில கம்யூனிஸ்டுகள் முயற்சிக்கலாம்

### செஸ்டர்பவுல்ஸ் எச்சரிக்கை

புதுடில்லி, ஆக. 19

ஆசிய நாடுகள் தமது பொருளாதார வளர்ச்சியில் கவனம் செலுத்தும் அதே நேரத்தில், கம்யூனிஸ் ஆக்கிரமிப்பை தடுத்து நிறுத்த உறுதி கொண்டுள்ளதாக, இந்தியாவிலுள்ள அமெரிக்க தூதர் திரு. செஸ்டர் பவல்ஸ் இங்கு குறிப்பிட்டார்.

தென் கிழக்கு ஆசியாவினூடாக பிரயாணம் செய்து திரும்பிய அமெரிக்க தூதர் புதன்கிழமையன்று விடுத்த அறிக்கையில் கடந்த இரண்டு ஆண்டு காலத்தில் இந்நாடு குறிப்பிடக் கூடிய முன்னேற்றமடைந்துள்ளது. கம்யூனிஸ்டுகளிடமிருந்து தாய்நாட்டைக் காப்பாற்ற பிரதமமந்திரி மேற்கொண்டு வரும் முயற்சிகளின் பலாபலன் இதுவாகும் என்று தெரிவித்துள்ளார்.

தென் வியட்நாம்பற்றி அவர் தெரிவிக்கையில், இராணுவ நிலை உக்கிரமடைந்து வருவதாகவும் தென் வியட்நாமிய துருப்புகள், அமெரிக்கா உட்பட நேச நாடுகளின் உதவியுடன் படிப்படியாக ஸ்திரமான வெற்றி பெற்று வருகிறது என்றும் கூறினர்.

செப்டம்பர் 11-ம் திகதி தேர்தலை தடுத்து, அதனை முறியடிக்க கம்யூனிஸ்டுகள் தம்மாலானவற்றை செய்யலாமென்றும் பவுல்ஸ் குறிப்பிட்டார்.

## இந்தியாவின் முதலாவது யுத்தக் கப்பல்

பம்பாய், ஆக. 19

இந்தியாவில் கட்டப்பட்ட முதலாவது யுத்தக் கப்பல் 1971-ல் தயாராகிவிடும் என்று இங்கு அறிவிக்கப்பட்டது.

இக்கப்பல் பம்பாயில் கட்டப்பட்டு வருகிறது.

இதுபற்றி சம்பந்தப்பட்ட அதிகாரியொருவர் தெரிவிக்கையில், கப்பல்கட்டும் துறையில் இந்தியா இப்பொழுது முன்னேறிவருகிறதென்றும் பதினெட்டு மாதங்களில் ஒரு கப்பல் வீதம் இங்கு கப்பல்கள் கட்டப்படும் என்றும் கூறினர்.

—

## ரஷ்யாவில் தமிழ் முழக்கம்

சென்னை, ஆக 19

கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயம் செய்துவிட்டு திரும்பியுள்ள இந்திய காங்கிரஸ் தலைவர் திரு. காமராஜர் அவ்விடங்களிலெல்லாம் சாதாரணமாக தமிழ் நாட்டு மக்களோடு பேசுவது போல் கன்னித் தமிழில் பேசினர்.

இந்தச் செய்தியை அவருடன் கூடச்சென்ற கைத்தொழில் மந்திரி திரு. ஆர் வெங்கட்ராமன் சென்னையில் தெரிவித்தார்.

ஐரோப்பாவில் அவரை வரவேற்ற சில தலைவர்கள், ஓவிய மேதைகள் தீட்டிய சித்திரங்களைப் பார்வையிட அவரை அழைத்தபோது காமராஜர் அவ்விஷயத்தில் அதிகம் சிரத்தைகாட்டவில்லை. அதற்கு மாறாக, கூட்டுப் பண்ணைகளில் வேலை செய்துவிட்டுதிரும்பு தொழிலாளர்களை மறித்து அவர்களுடைய தொழிலைப் பற்றியும் ஜீவியத்தைப் பற்றியும் அறிந்துகொள்ள ஆவல் காட்டினர்.

காமராஜரைப்பற்றி முன்பின் தெரியாத அந்நாட்டு மக்கள் எளிய உடை அணி[...]ந்து இனிமையாகப் பழகும் இந்த மனிதரை 'உண்மையில் ஒரு பாட்டாளி மகன்' என்று போற்றினர்.

## பிரிட்டிஷ் ரோந்துக் கப்பல்கள் வாபஸ்

லண்டன், ஆக. 19

மலேசியாவினதும் சிங்கப்பூரினதும் 2000 மைல் நீள கடல் எல்லையை ரோந்து புரிந்து வந்த பிரிட்டிஷ் கடற்படைக் கப்பல்கள்இப்பொழுது வாபஸ் பெறப்பட்டு விட்டன.

பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சு இந்த தகவலை அறிவித்தது.

கடந்த மூன்று வருடங்களாக தொடர்ந்து இராப்பகலாக இந்தோனேஷிய ஊடுருவல் காரர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுவந்த கடற்படை ரோந்துகள், தூர கிழக்கு கடற்படை கமாண்டர் வைஸ் அட்மிரல் சேர். பிராங்டுவிலின் உத்தரவின் பேரில் வாபஸ் பெறப்பட்டுவிட்டதாய் இந்த அறிவித்தல் கூறுகிறது.

சரவாக், சபா கடலோர பிராந்தியத்திலும், மலாக்கா நீரிணையிலும் தென் சீன கடலிலும் சுமார் 25 போர்க்கப்பல்கள் இராப்பகலாய் ரோந்து புரிந்து வ[ந்]தன என்பது குறிப்பிட[த்]தக்கது.

இந்தோனேஷியாவு[ம்] மலேசியாவும் தங்கள[து] எதிர்ப்புக் கொள்கையை கைவிட்டதை அடுத்[து] பிரிட்டிஷ் அரசாங்கம் இந்[த] நடவடிக்கையை மே[ற்] கொண்டுள்ளது.

—

சிட்னி, ஆக. 19

சிட்னிக்குத்தெற்கேஉள்ள கிராமத்தில் ஆறு பேரைக் கொண்ட குடும்பமொன்[று] அவர்கள் வீடு தீப்பற்றி[ய]தன் விளைவாக எரிக்கப்பட்டு இறந்தனர். (பி. டி. ஸி)

## 'மலேசியாவை தாமதமின்றி அங்கீகரிக்க வேண்டும்'

### சுகர்ணேவின் சுதந்திரதின உரை: முஸ்லிம் ஸ்தாபனங்கள் கண்டனம்

ஜாகர்த்தா, ஆக. 19

இந்தோனேஷிய அதிபர் டாக்டர் சுகர்ணேவின் சுதந்திர தின உரையை இங்குள்ள ஐந்து பெரிய முஸ்லிம் ஸ்தாபனங்கள் வன்மையாகக் கண்டித்துள்ளன.

''சுகர்ணேவின் சுதந்திர தின பிரசங்கத்தை மக்கள் ஏற்றுக்கொள்ள முடியாது'' என்று இந்த ஸ்தாபனங்கள் அறிவித்துள்ளன.

சுதந்திரதினத்தன்று சுகர்ணே நிகழ்த்திய பிரசங்கத்தில் மலேசியா பற்றிக் குறிப்பிட்டிருப்பதையே இந்த ஸ்தாபனங்கள் வன்மையாகக் கண்டித்துள்ளன.

ஸாபா, ஸரவாக் தேர்தல்களுக்குப்பின்னரே மலேசியாவை அங்கீகரிக்க முடியும் என்று சுகர்ணே தெரிவித்திருந்தார்.

மலேசியாவை அங்கீகரிப்பதில் தாமதம் கூடாதென்றும் ஐ. நா. வில் உடனடியாகச்சேர்த்துகொள்ளவேண்டுமென்றும் இந்த ஸ்தாபனங்கள் கோரிக்கை விடுத்துள்ளன,

தொழிற்சங்கங்கள், மாணவர் இயக்கங்கள், இளைஞர் ஸ்தாபனங்கள்ஆகியவற்றை இது கொண்டுள்ளது.

## சந்திரன் பற்றிய தெளிவான படங்கள்

### அமெரிக்க செய்மதி அனுப்பியுள்ளது

கென்னடிமுனை, ஆக. 19

சந்திரனை நோக்கி அமெரிக்கா அனுப்பிய ''லூனர்-ஆர்பிட்டர்'' என்ற செய்மதி, சந்திரனின் மறைந்த பகுதிகளைத் தெளிவாகப் படம்பிடித்து பூமிக்கு அனுப்பியுள்ளது.

இப்பகுதிகளை ஆர்பிட்டர் நேற்று முதற் தடவையாகப் படம்பிடித்து பூமிக்கு 'சமிக்ஞைகள்' மூலம் பூமிக்கு ஒளி பரப்பியதாக அறிவிக்கப்பட்டது.

இச் செய்மதிஇப்பொழுது இருண்ட பகுதிகளுடன் வெளிச்சமான பகுதிகளையும் படம் பிடித்து வருகிறது என்றும் புகைப்படக் கருவிகள் சிறப்பான முறையில் இயங்கி வருகின்றது என்றும் பூமியிலுள்ள கட்டுப்பாட்டு நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சந்திரனில் மனிதன்இறங்கக்கூடிய ஒன்பது [...] இச்செய்மதி பட[ம்பிடித்] [த]னுப்பும்.

## சாகும்வரை உண்ணாவிரதம்

புதுடில்லி, ஆக. 18

நாடு முழுவதும் பசுக்களைக்கொலை செய்வதை மத்திய அரசாங்கம் சட்ட மூலம் தடை செய்யாவிடில், தாம் இறக்கும்வரை உண்ணாவிரதம் இருக்கப்போவதாக இரு சங்கராச்சாரியர்களும், சமண பிக்கு ஒருவரும், சமூக சேவையாளர் ஒருவருமாக நான்கு பேர் தீர்மானித்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சமூகசேவையாளரான திரு. முனி சுசில்குமார் தாங்கள் எப்போது தமது உண்ணாவிரதத்தை ஆரம்பிப்பது என்பது பற்றி முடிவுசெய்யவில்லையென்றும், இதற்குக் காரணம் இவ்விஷயத்தில் விரைவில் அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளலாமென எதிர்பார்க்கப்படுவதேதென்றும் பத்திரிகையாளரிடம் தெரிவித்துள்ளனர்.

(பி. டி. ஸி.)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

உலகத்தில் அதிக துன்பமும் துயரமும் இருப்பதற்கு என்ன காரணம்? இறைவனை மறப்பது தான். இறைவன் நாமத்தை கசிந்துருகக் கூறினால், மனோ வியாதிகளான காமம், வெறுப்பு, பேராசை, பொறாமை முதலியன ஆச்சரியமாக மாறும்.

—சுவாமி ராமதாஸ்

# ஈழநாடு

EELANADU National Tamil Daily, Post Box 49 JAFFNA.
Telegrams : EELANADU Jaffna. Telephone : 189

[யாழ்ப்]பாணம் பராபவ ஆண்டு ஆவணி மீ 4 உ (20-8-66)

## 'சிங்களம் மட்டும்' இயக்கம்

ஜனப்பிரதிநிதிகள் சபையில் எதிர்க்கட்சி அங்கத்தினர் சிலர் ஆரம்பித்த 'சிங்களம் மட்டும்' இயக்கத்தை எதிர்க்கட்சித் தலைவர் திருமதி ஸ்ரீமா பண்டாரநாயகா ஆதரிக்கவில்லை. ஆதரிக்காதது மட்டுமன்றி அந்த இயக்கத்துக்கு அவர் எதிர்ப்பும் தெரிவித்திருக்கிறாராம். உண்மை நிலையை எதிர்க்கட்சித் தலைவர் உணர்ந்து கொண்டுள்ளதற்காக அவரைப் பாராட்டவேண்டும்.

'சிங்களம் மட்டும்' இயக்கத்தை ஜனப்பிரதிநிதிகள் சபையில் ஆரம்பித்த எதிர்க்கட்சி அங்கத்தினர்கள், தங்கள் இயக்கத்துக்கு அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த சில அங்கத்தினர்களும் ஆதரவளிப்பதாகத் தெரிவித்தனர். நிதி மந்திரி திரு. வன்னிநாயகா தமது வரவு-செலவுத்திட்ட உரையை ஆங்கிலத்தில் நிகழ்த்தியபோதுதான் அந்த எதிர்க்கட்சி அங்கத்தவர்களுக்கு 'சிங்களம் மட்டும்' நினைவு வந்தது. சிங்களப் பிரதிநிதிகள் எவரும் சபையில் சிங்களத்தில் தவிர வேறு மொழிகளில் பேசினால், சபையிலிருந்து வெளிநடப்புச் செய்வதென்ற இயக்கத்தை ஆரம்பித்தனர். வரவு-செலவுத் திட்ட விவாதத்தின்மீது பேசிய எதிர்க்கட்சியின் முக்கிய தலைவர்களான டாக்டர் என்.எம். பெரேராவும் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகாவும் இந்த இயக்கத்தைப் பற்றி அக்கறை கொள்ளவில்லை. அவர்கள் ஆங்கிலத்தில்தான் பேசினர்.

ஜனப்பிரதிநிதிகள் சபையில் 'சிங்களம் மட்டும்' இயக்கம் இதற்கு முன்னரும் ஒரு தடவை ஆரம்பிக்கப்பட்டு மறைந்துவிட்டது. தங்கள் வாக்காளர்களைத் திருப்திப்படுத்துவதற்கு இப்படியும் ஒரு இயக்கம் ஆரம்பிக்கலாமெனச் சிலர் கருதிவிட்டனர். அவர்கள் மீது குறைசொல்வதற்கு இடமில்லை.

'சிங்களம் மட்டும் சட்டம்' 1956-ம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டது. 1960-ம் ஆண்டில் அதைத் தீவிரமாக அமுலுக்குக் கொண்டு வருவதென்று அப்போதிருந்த திருமதி ஸ்ரீமா பண்டாரநாயகாவைப் பிரதமராகக் கொண்ட ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கம் தீர்மானித்து நடவடிக்கையும் எடுத்தது. 1956-ம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட சிங்களம் மட்டும் சட்டத்தை நாடு முழுவதிலும் அமுலுக்குக் கொண்டுவர முன்னைய அரசாங்கங்கள் எடுத்த முயற்சிகள் கொஞ்சமல்ல. இதனால் நாட்டின் சமூக வேற்றுமையும், நிர்வாகச் சீர்குலைவுமே ஏற்பட்டன. என்றாலும் முன்னைய அரசாங்கங்கள் உண்மை நிலையை ஒப்புக்கொள்ள மறுத்தன. சட்டம் மக்களுக்காக அல்ல, சட்டத்துக்காகவே மக்கள் என்ற மனப்பான்மையை பிடிவாதமாகக் கைக்கொண்டனர். இதன் விளைவு நாட்டின் முன்னேற்றம் தடைப்பட்டது; பொருளாதாரக் கஷ்டம் அதிகரித்தது; அரசாங்கத்தின்மீது மக்கள் அதிருப்தி கொண்டனர்.

மொழி என்பது ஒருவரையொருவர் புரிந்து கொள்வதற்கான சாதனம். ஒருவர் பேசுவதை மற்றவர் புரிந்துகொள்ளாவிடில் அவர் பேசுவதால் என்ன பயன்? ஜனப்பிரதிநிதிகள் சபையில், மக்களின் குறை நிறைகளைத் தெரிவிப்பதற்காகவே மக்கள் தங்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்து அனுப்புகின்றனர். அவர்கள் புரியாத மொழியில் அங்கு பேசினால் அதனால் யாருக்கு என்ன பயன்?

'சிங்களம் மட்டும்' சட்டத்தை ஜனப்பிரதிநிதிகள் சபையில் பிடிவாதமாக அமுல் நடத்துவதனால் பயன் கிடைக்காது என்பதை திருமதி பண்டாரநாயகா உணர்ந்து கொண்டது மகிழ்ச்சியளிக்கிறது. நாட்டின் நிலையையும் உணர்ந்து, இதர சமூகத்தவரின் கஷ்டங்களையும் அறிந்து 'சிங்களம் மட்டும்' என்ற கொள்கையிலும் மாற்றம் செய்ய முன்வருவாராயின் நாட்டு மக்கள் அனைவரினதும் அன்பையும் ஆதரவையும் அவர் பெறுவது கடினமல்ல.

## வெள்ளி விழா

யாழ்ப்பாணம், சனி

கைதடி மத்திய ஐக்கிய நாணய சங்க வெள்ளி விழா சென்ற சனிக்கிழமை கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாசாலை மண்டபத்தில் திரு. ச. மகாலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

''எமது கிராமத்தில் உழவுக்குந் தொழிலுக்கும் ஏற்ற ஊக்கமும் உளவலியும் உண்டாக்கிய எமது சங்கத்தின் வெள்ளிவிழாவை எடுப்பது மிகவும் பொருத்தமாக அமைந்துள்ளது'' என தலைவர் தமது தலைமையுரையில் கூறினார். மற்றும் இருவாளர்கள் மு. மதியாபரணசிங்கம், இ. வேலாயுதர், நா. பொன்னம்பலம், சே. சின்னத்தம்பி, இ. அம்பலவாணர் ஆகியோர் உட்படப் பலர் பேசினர். பாடசாலை மாணவர்களின் கதம்ப நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

## செல்வச்சந்நிதி உற்சவம் ஆரம்பம்

இமையாணன், வெள்ளி

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி கோவிலில் இவ்வருடத்திய உற்சவம் சென்ற செவ்வாய்க்கிழமை கொடியேற்ற உற்சவத்துடன் ஆரம்பமாகியது. ஏராளமான மக்கள் விழாவில் கலந்துகொண்டனர்.

மக்கள் போக்குவரத்தை உத்தேசித்து, பஸ் சேவை அதிகரிக்கப்பட்டுள்ளது.

# சுவாமி நாதத்தம்பிரான் இம்மாதம் 23-ல் வருகிறார்

## நல்லூரில் திருஞானசம்பந்த ஆதீன கிளை மடம் அமைக்க முடிவு

யாழ்ப்பாணம், சனி

மதுரை திருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீனத்தின் கிளைமடம் ஒன்று நல்லூரில் நிறுவப்படவிருக்கிறது. அதன் அதிபராக வண்ணை ஸ்ரீ சி. எஸ். எஸ். மணிபாகவதர் நியமிக்கப்பட்டுள்ளார்.

மதுரை ஆதின கர்த்தரிடம் மந்திரி காஷாயம் பெற்று ஸ்ரீமத் சுவாமி நாதத் தம்பிரான் சுவாமி என்ற நாமமும் பெற்றுள்ளார். அப்பொழுதுதான் கிளை மடத்திற்கு அதிபராகவும் நியமனம் செய்யப்பட்டார்.

ஸ்ரீ சி. எஸ். எஸ். மணிபாகவதர் மலேயாவுக்கு மூன்று முறை விஜயம் செய்து கதாகாலட்சேபம் மூலமாக சிறந்த பணிகள் பல புரிந்திருக்கிறார்.

இப்போது மதுரையிலிருக்கும் ஸ்ரீ சி. எஸ். எஸ். மணிபாகவதர் இம்மாதம் 23-ம் திகதி செவ்வாய்க்கிழமையன்று விமான மார்க்கமாக இலங்கைவந்து சேருவார். இவரை சிறந்த முறையில் வரவேற்பதற்கு இங்குள்ள சைவசமயப் பெரியார்கள் ஏற்பாடுகள் செய்துவருகின்றனர்.

## திட்ட அமைச்சில் மாற்றங்கள்

கொழும்பு, வெள்ளி

உலகவங்கி நிபுணர் திரு. என். வாட்டேர்ஸின் சிபார்சைத்தொடர்ந்து திட்டமிடுதல், பொருளாதார விவகாரங்களுக்குப்பொறுப்பான அமைச்சு அதன்கீழுள்ள இலாகாக்களை இணைத்து அமைச்சின் கீழ் ஓர் பூரண நிர்வாகப்பகுதியாக்குவதற்கான ஆலோசனைகளை ஆராய்ந்து வருகிறது.

திட்டமிடுதல், திட்டம் அமுலாக்கல், வெளிநாட்டு உதவி ஆகிய மூன்று வெவ்வேறு இலாகாக்களையும் ஒன்றுசேர்த்து, அவற்றின் வேலையை அமைச்சின் புதிய ஆறு பகுதிகளுக்கிடையே பகிர்ந்துவிட ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு பகுதிகளாவன; பொருளாதார விவகாரங்கள்; வெளிநாட்டு உதவி; பொதுவான திட்டமிடுதல்; திட்டம் அமுலாக்கல்; சர்வதேச பொருளாதார விவகாரங்கள்; வெளிநாட்டுச் செலவாணி, வரவு செலவுத்திட்டம் ஆகும்.

## கார்லைசென்ஸ் யாருடையது?

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த திரு. எஸ். கிறிஸ்டி என்பவர் கார் லைசென்ஸ் ஒன்றுகண்டெடுத்து ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர்தகுந்த அத்தாட்சிகளுடன் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

## ஆசிரியருக்கு ஒழுங்கு விதிகள்

கொழும்பு, வெள்ளி

கல்வித்துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் கடைப்பிடிக்கவேண்டிய ஒழுங்குவிதி முறைகள் சம்பந்தமாக வித்தியாதிபதி திரு. டி. ஈ. ஹெட்டியாராய்ச்சி நெறிமுறைக் கோட்பாடொன்றைத் தயாரிக்க முயற்சிகள் மேற்கொண்டுள்ளார். ஆசிரியர்கள், அதிபர்கள், கல்வி உத்தியோகத்தர்கள், பரிசோதகர்கள் ஆகியோர் இதன்படி நடந்துகொள்ள வேண்டியிருக்கும் ... [illegible]

## இசைவிழா

### இன்றைய நிகழ்ச்சிகள்

மீசாலை, சனி

மீசாலை தமிழிசைச்சங்கத்தின் இசைவிழா இறுதி நாள் நிகழ்ச்சிகள் இன்று திரு. க. நடராசா தலைமையில் நடைபெறும்.

திரு. எஸ். எம். இரத்தினம் பிள்ளை திரு. என். சண்முகரத்தினம் ஆகியோர்களுடைய பாட்டுக்கச்சேரியும் நாதஸ்வர, தவில் கச்சேரியும் இடம்பெறும்.

## "பாகிஸ்தானே முயற்சிக்க வேண்டும்"

—துங்கு

கோலாலம்பூர், ஆக.19

மலேஸியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே ராஜீய உறவுகளை மீண்டும் ஏற்படுத்திக்கொள்வதில் பாகிஸ்தானே முயற்சிக்க வேண்டும் என்று மலேசியப் பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

## புதிய அஸ்கிரிய மகாநாயக்க தேரோ

கண்டி, வெள்ளி

அஸ்கிரிய பீடத்தின் புதிய மகாநாயக்க தேரோவாக வண. உடுகம ஸ்ரீ புத்தரக்கித்த ரத்னபால அவர்கள் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் அப்பீடத்தின் 17-வது மகாநாயக்க தேரோவாவர்.

(5-ம் கலத் தொடர்ச்சி)

கள் அவ்விதம் செய்யக் கூடாதா?

ஃ ஃ ஃ

தமிழகத்தில் சுமங்கலிப் பெண்களும், கன்னிப்பெண்களும் தலையில் புஷ்பமில்லாமல் அநேகமாக இருக்க மாட்டார்கள். இங்கும் நமது பெண்மணிகளில் ஒரு சிலர்தான் பூக்கட்டி தலையில் அழகாக வைத்துக் கொள்ளுகின்றனர். இங்கு வாசமுள்ள புஷ்பங்களை அதிகமாகப் பயிர்செய்தால் பெண்களும் அதிகமாக அதைப் பாவிக்கக்கூடும்.

உணவு உற்பத்திக்காகப் பயன்படக்கூடிய நிலங்களை புஷ்பச்செடிகளுக்குப் பயன்படுத்தலாமா? என்று சிலர் கேட்கக்கூடும். உணவை அதிகமாக உற்பத்தி செய்யவேண்டியது தான். அதற்காக நிலத்தைக் கூடுமானவரை பாவிக்கவேண்டியதும் அவசியம். ஆனால் இங்கு ஒவ்வொரு ஊரிலும் எவ்வளவோ நிலம் தரிசாகக் கிடக்கிறது. அங்கு புஷ்பத் தோட்டங்களை பயிர் செய்யலாம். பல வண்டுகளும் வந்து தேன் உண்ணும். தேனும் கிடைக்கலாம். ஊரும் நறுமணத்துடன் அழகுபெறுமல்லவா?

ஃ ஃ ஃ

அசைந்தவன்காண் நடமாடிப் பாடல்பேணி அழகிவண்ணத்தில் அடியும் முடியும் தேடப், பசைந்தவன்காண் பேய்க்கணங்கள்பரவியேத்தும் பான்மையன்காண் பரவி நினைந்தெழுவார் தம்பால், கசிந்தவன்காண் கரியினுரி போர்த்தான்காண் கடலில் விடம் உண்ட மரரர்க் கமுதமே இசைந்தவன்காண் எழிலாரும் பொழிலார் கச்சி ஏகம்பன்காண் அவனென் எண்ணத்தானே.

—அப்பர்சுவாமிகள்.

# ஐயாறன் எழுதுகிறது

பிரதமர் டட்லிசேனநாயக்கா யாழ்ப்பாணத்துக்கு வந்தபோது நீர்வேலி மக்கள், தமிழகத்திலிருந்து பெரிய ரோஜாப்பூமாலையை வரவழைத்துப்போட்டு தங்கள் மகிழ்ச்சியையும் மரியாதையையும் தெரிவித்ததாக ஒரு செய்தி கூறுகிறது.

ரோஜாப்பூ யாழ்ப்பாணத்தில் நன்றாகப் பூக்குமென்பதை பலாலி விமான நிலையத்தைப் பார்த்தாலே தெரிகிறது. பலாலியில் அழகான ரோஜா புஷ்பங்கள் நல்ல வாசமுடன் ஏராளமாகப் பூத்திருப்பதைப் பார்த்தேன். வெகு சிரமப்பட்டு பயிர்செய்திருக்கிறார்கள். கீரிமலை சிவன்கோவிலுக்கு சில வாரங்களுக்கு முன் சென்றிருந்தேன். கோவிலை அடுத்து அழகான ஓர் சிறிய நந்தவனம். ரோஜா முதலிய புஷ்பங்கள் பூத்து கண்களையும் மனதையும் வசீகரிக்கின்றன. கோவிலுக்குத் தேவையான புஷ்பங்கள் கிடைப்பதாக குருக்கள் தெரிவித்தார்.

ஃ ஃ ஃ

கி. வா. ஜ. தம்பதிகளுக்கு சென்னையிலே மணிவிழா நடக்கையில், ஒரு ஆள் உயரமுள்ள பெரிய பெரிய ரோஜாப்பூ மாலைகளைப் போட்டதாக ஓர் அன்பர் தெரிவித்தார். யாழ்ப்பாணத்தில் மூந்தாநாள் நடந்த மணிவிழாவின் போது, நூற்றுக்கணக்கான மாலைகள் அவருக்குப்போடப்பட்டன. ஊரில் மாலையே கிடைக்கவில்லை என்றும், ஒரு சிறிய மாலையை ஐந்து ரூபாய் கொடுத்து எங்கிருந்தோ வாங்கியதாயும் ஓர் அன்பர் மூலம் அறிந்தேன். என்றாலும் ஒரு ரோஜாப்பூ மாலையும் என் கண்ணில் படவில்லை. மாலை கட்டுகிற அளவுக்கு ரோஜாப்பூ கிடைக்கவில்லைப்போலும்.

பலாலி விமானநிலையத்தில் பூக்கும் ரோஜாக்களைக் கொண்டு, இரண்டொரு மாலைகள் கட்டலாம். ஆனால் அங்கு ஒரு பூவையும் தொடக்கூடாதென்று கண்டிப்புச் செய்துள்ளனர். அதைப் பறிக்கவிட்டால், அந்த விமான நிலையமே அழகில்லாது போய்விடும்.

ஃ ஃ ஃ

இந்தியாவிலே ரோஜா, மல்லிகை முதலிய செடிகளை பலநூறு ஏக்கர்களில் வளர்க்கின்றனர். புஷ்பங்களிலேயே நல்ல வியாபாரம். இப்போது இந்திய புஷ்பங்களுக்கு இங்கு தடைவரி போட்டிருக்கிறார்கள். அது மட்டுமன்றி புஷ்பங்களை புகைபோட்டே இங்கு கொண்டுவரவேண்டுமென்று விதி. புஷ்பங்களை புகை போட்டால் எப்படி இருக்கும்!

இங்கு பல கோவில்களுள்ளன. ஒவ்வொரு கோவிலைச்சுற்றியும் நந்தவனம் வைத்துப் பயிர் செய்யப் போதிய இடமுண்டு. ஆனால் ஒருசில கோவில்களில்தான் பூச்செடிகளை வைத்துப்பயிர் செய்கின்றனர். எல்லாக் கோவில்களைச் சுற்றியும் புஷ்பச்செடிகள் வைத்து நந்தவனங்களை வளர்த்தால், யாழ்ப்பாணத்தில் புஷ்பத்துக்குப் பஞ்சமே இராது, ஏராளமான பூமி சும்மா தரிசாகவும் காடாகவும் கிடக்கிறது. ஒவ்வொரு கிராமசபையும் நந்தவனங்களை வைத்துப் பயிர்செய்தால் ஊருக்கே எவ்வளவு அழகாக இருக்கும்! நந்தவனங்களை வைத்துப் பயிர் செய்வது பெரிய புண்ணியமென்று கூறப்படுகிறது. சமூகத்தில் வசதியுள்ளவர்

(4-ம் கலம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுப்பின்மை, திறமையின்மை, அதிகாரதுஷ்பிரயோகம் மந்திரியிடம் தெரிவித்திருந்தேன்

## யாழ். மாநகரசபை விவகாரம்: உள்ளூராட்சி கமிஷனர் அறிக்கை

### நீதிமன்றத்தில் விளக்க மனு தாக்கல்

யாழ்ப்பாணம், சனி

''யாழ்ப்பாணம் மாநகரசபை மேற்கொண்டுவந்தமுடிவுகளில் காணப்பட்டபொறுப்பின்மை, திறமையின்மை, அதிகார துஷ்பிரயோகம் ஆகியவைகள்பற்றி பல தடவைகளில் நான் உள்ளூராட்சி மந்திரி செனட்டர் எம். திருச்செல்வத்தின் கவனத்துக்குக் கொண்டுவந்திருக்கின்றேன்'' என்று கொழும்புத்துறை அங்கத்தவரான திரு தம்பு கந்தையா என்பவர் ஸ்தலஸ்தாபன மந்திரி திரு. எம். திருச்செல்வத்துக்கு எதிராகத் தாக்கல் செய்த உத்தரவு கோரும் மனுவுக்கு எதிராக நீதிமன்றத்தில் ஸ்தலஸ்தாபனசேவைக் கமிஷனர் திரு. டபிள்யூ. ஜே. பெர்னாண்டோ தாக்கல் செய்துள்ள சத்தியக் கடதாசியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சத்தியக்கடதாசியில் திரு. பெர்னாண்டோ மேலும் தெரிவித்திருப்பதாவது:

#### விசாரணைகள் நடத்தினேன்

''வாதியானஉள்ளூராட்சி மந்திரியின் கோரிக்கையின் மீது நான் யாழ்ப்பாணம் மாநகரசபை அலுவலகத்துக்குச் சென்றேன். மாநகர நிர்வாகத்தில் நிலவும் சீர்கேடுகள் குறித்து வாதிக்குச் செய்யப்பட்ட பல்வேறு புகார்கள் நடத்துவதற்காகவே நான் அங்கு சென்றிருந்தேன். எனது விஜயத்துக்கான நோக்கம்பற்றியும் திகதிபற்றியும் அப்பொழுது யாழ்ப்பாண மாநகர மேயராக இருந்தவருக்கு நான் கடிதமூலம் அறிவித்திருந்தேன்.

1966-ம் ஆண்டு மே மாதம் 27-ம் திகதி காலை 10 மணிக்கு மாநகரசபை அலுவலகத்துக்கு நான் விஜயம் செய்திருந்தபொழுது மேயரும் சமுகமளித்திருந்தார். 1964-ம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் திகதியிலிருந்து கடைசியாக நடைபெற்றகூட்ட நிகழ்ச்சிகள், தஸ்தாவேஜுகள் ஆகியவற்றுடன் தயாராகவிருக்குமாறு மேயரை நான் முன்னரே கோரியிருந்தேன். இதற்கிணங்க, சகல தஸ்தாவேஜுகளுடன் எனது பார்வைக்குக் கிடைக்கக்கூடியதாக ஒழுங்குகள் செய்யும்படி மாநகரசபை கமிஷனருக்கு மேயர் உத்தரவிட்டிருந்தார். 27-ம் திகதியும் 28-ம் திகதியும் நான் அவற்றைப் பார்வையிட்டேன். யாழ்ப்பாணம் உள்ளூராட்சி உதவிக் கமிஷனர், மாநகரசபை கமிஷனர், மாநகரசபை அதிகாரிகள் ஆகியோர் அப்பொழுது எனக்கு உதவியாகவிருந்தனர். 28-ம் காலை 9 மணிவரைக்குள் நான் சகல கூட்டநிகழ்ச்சிகளையும் பார்வையிட்டு முடிக்காததால், மாநகரசபைக் காரியாலய நேரத்திலும் நான் அன்றிரவு தங்கியிருந்த வாசஸ்தலத்திலும் அவற்றைப் பார்வையிட்டேன்

#### மந்திரியுடன் பேசினேன்

யாழ்ப்பாணத்திலிருந்து நான் கொழும்பு திரும்பியதும் அடுத்த நாட்காலை உள்ளூராட்சி மந்திரி செனட்டர் எம். திருச்செல்வத்துடன் டெலிபோனில் தொடர்பு கொண்டேன் மந்திரியின் உத்தரவைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் மாநகரசபைக்கு விஜயம் செய்தது பற்றியும் அங்கு நடத்திய விசாரணை விபரங்கள் குறித்தும் நான் டெலிபோனில் தெரிவித்தேன். இதன்பின்னர் மந்திரியை நேரில் சந்தித்து நான் யாழ்ப்பாணம் மாநகரசபை அலுவலகத்தில் நடத்திய விசாரணைகளின் விபரங்களை விளக்கமாகக் கூறினேன். சபை தனது உரிமைகளையும் கடமைகளையும் மேயருக்குச் சாதகமாகப் பயன்படுத்தி வருகிறது என்ற எனது அபிப்பிராயத்தையும் மந்திரியிடம் தெரிவித்தேன். யாழ்ப்பாணம் மாநகரசபை மேற்கொள்ளும் முடிவுகள் பொறுப்பற்றவையாகவும் ஒழுங்கீனமுள்ளவைகளாகவுமிருப்பதுடன் அதிகாரங்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றன என்றும் மந்திரியின் கவனத்துக்கு நான் கொண்டுவந்தேன். யாழ்ப்பாணம் மாநகரசபையின் நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது என்றும் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டியது மிகவும் அவசியமென்றும் மந்திரிக்கு நான் தெரிவித்திருந்தேன். அன்று மாலை மந்திரியிடம் எனது அறிக்கையைச்சமர்ப்பித்தேன்.

#### நடவடிக்கைகள்

யாழ்ப்பாணம்மாநகரசபையின் விரும்பத்தகாத, சட்டவிரோதமான நடவடிக்கைகள் என்பவற்றின் கீழ் ஸ்தல ஸ்தாபன கமிஷனர் பத்துக் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியுள்ளார்.

சபையின் சட்டவிரோதமானதும், விரும்பத்தகாததுமான நடவடிக்கைகளில் பின்வருவனவற்றையும் அவர் குறிப்பிட்டார்.

○ முன்னரே நியமிக்கப்பட்ட நிரந்தரக் குழுக்களைக் கலைத்துச் சட்ட உரிமையின்றிப் புதுக் குழுக்களை அவற்றின் இடத்தில் நியமித்தது.

○ போதிய முன்னறிவித்தல் இன்றிச் சபையின் முக்கிய விஷயங்கள் சபையின் கூட்டங்களில் கொண்டுவரப்படுவதும், தீர்மானங்கள் நிறைவேற்றப்படுதலும்.

மாநகரசபை சட்டத்தின் 227, 228, 229-ம் விதிகளின் நடைமுறைகளைக் கைவிடுவதற்குச் செய்த முடிவு.

ஒப்பந்தங்கள் செய்வதற்கான சபையின் சகல அதிகாரங்களையும் மேயருக்கு வழங்கியது.

முன் அறிவித்தலின்றி புதிய பதவிகளை ஏற்படுத்தவும் அப்பதவிகளுக்கு நிரந்தரமாகவோ அல்லது தற்காலிகமாகவோ ஆட்களை நியமிப்பதற்கு மேயருக்கு அதிகாரங்கள் வழங்கியது.

பெரிய கடையில் பாவிக்கப்படாத புதிய தகரக் கொட்டகைகளை ஒப்பந்தக்காரர்களை அழைக்காமல் நிறுவுவதற்கு மேயருக்கு அதிகாரம் வழங்கியது.

மராமத்து என்ஜினியர் பதவியை நீக்கி, அதற்குப் பதிலாக வேலைப்பகுதி அத்தியட்சகர் பதவியை ஏற்படுத்தியது.

சபையின் அங்கீகாரம் பெறுமல் வேலையாட்களை நியமித்தது, டெண்டர் முறைகளைச் சரிவரப் பின்பற்றத் தவறியது போன்ற பல காரணங்கள் சபையின் நிர்வாக ஊழல்களைக் காட்டியது என்றும் இதன் விளைவாக சபையின் நிதி வீணுக்கப்பட்டிருக்கிறது என்றும் ஸ்தலஸ்தாபன சேவைக் கமிஷனர் சமர்ப்பித்துள்ள விளக்க மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மாட்டுவண்டி சவாரிப் போட்டி

ஊர்காவற்றுறை, வெள்ளி

சரவணை கிராமமுன்னேற்றச் சங்க ஆதரவில் மாபெரும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி ஒன்று வரும் புதன்கிழமை மாலை சரவணை நாய்வெட்டி வாய்க்கால் ''நாவலர்'' மைதானத்தில் நடைபெறவிருக்கிறது.

---

## பாகிஸ்தானுக்கு அமெரிக்க உதவி

ராவல்பிண்டி, ஆக. 19

பாகிஸ்தானின் தொழில் விருத்திக்குத் தேவையான மூலப்பொருட்களையும், மற்றும் அவசிய பொருட்களையும்வாங்குவதற்கென அமெரிக்கா 7 கோடி டாலர் உதவி அளித்துள்ளது. (பி,டி.ஸி.)

---

## தேசிய சுவீப்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரூபா 1655 கொண்ட 100 ஆறுதல் பரிசுகள்:-

| | |
|---|---|
| 16 Q 0747 | 61 F 0686 |
| 48 X 0145 | 15 O 0979 |
| 23 Z 0227 | 21 A 0349 |
| 16 O 0770 | 43 J 0620 |
| 40 U 0155 | 37 G 0797 |
| 38 D 0945 | 39 E 0099 |
| 17 N 0500 | 66 P 0189 |
| 28 M 0402 | 63 T 0626 |
| 41 B 0897 | 02 L 0930 |
| 40 N 0467 | 17 B 0038 |
| 08 M 0753 | 59 G 0915 |
| 16 T 0740 | 53 D 0192 |
| 13 J 0613 | 04 U 0474 |
| 15 X 0817 | 28 R 0164 |
| 34 D 0782 | 71 N 0026 |
| 23 A 0107 | 04 Z 0166 |
| 41 G 0204 | 41 M 0576 |
| 62 Z 0793 | 64 B 0535 |
| 22 F 0480 | 52 E 0429 |
| 29 N 0862 | 65 B 0273 |
| 42 M 0193 | 09 J 0493 |
| 43 Z 0843 | 40 E 0928 |
| 71 B 0299 | 18 S 0242 |
| 09 O 0518 | 54 M 0498 |
| 49 P 0198 | 13 J 0205 |
| 51 R 0832 | 06 B 0995 |
| 59 D 0957 | 67 J 0469 |
| 36 V 0156 | 36 U 0124 |
| 19 X 0851 | 25 V 0685 |
| 44 W 0698 | 10 R 0593 |
| 16 G 0787 | 68 J 0020 |
| 48 S 0806 | 08 M 0389 |
| 28 B 0139 | 18 N 0008 |
| 11 D 0223 | 10 W 0271 |
| 21 Q 0749 | 11 G 0285 |
| 22 Z 0052 | 09 X 0950 |
| 19 E 0867 | 08 X 0290 |
| 03 N 0061 | 69 L 0730 |
| 59 G 0090 | 40 C 0233 |
| 24 E 0204 | 56 A 0418 |
| 39 L 0382 | 11 E 0370 |
| 06 N 0694 | 18 Q 0623 |
| 68 U 0147 | 58 A 0930 |
| 27 O 0247 | 22 U 0139 |
| 56 S 0689 | 10 U 0237 |
| 28 V 0462 | 52 Y 0362 |
| 26 Y 0133 | 39 Z 0048 |
| 33 Q 0939 | 41 R 0941 |
| [illegible] | [illegible] 0336 |
| 39 F 0953 | 10 X 0191 |

## தாயார் பிரிவு தாங்காமல் தனயன் தற்கொலை!

கிளிநொச்சி, வெள்ளி

'அன்பே உருவான அம்மாவின் பிரிவு எனக்கு வாழ்வையே வெறுக்க வைத்துவிட்டது! கடந்த இரவு எனது அன்பு அம்மா வந்து என்னைத் தன்னுடன் வரும்படி அழைத்தாள். நான் அம்மாவின் செல்கிறேன்!' என்று இளைஞர் ஒருவர் தான் தற்கொலை செய்து கொள்வதற்கு முன்னால் இப்படியாக ஒரு கடிதத்தை உறவினருக்கு எழுதிவைத்திருந்தார்.

கிளிநொச்சி ஜெயந்தி நகரைச்சேர்ந்த 23 வயது இளைஞர் அந்தோனிப்பிள்ளை மாரிமுத்துவின் மரண விசாரணையின்போது மேற்படி தகவல் தெரியவந்தது. திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. மூ. யோகலிங்கம் மரண விசாரணை நடத்தினார்.

கடந்த ஒரு மாதகாலமாக மனச்சஞ்சலம் அடைந்தவராகக் காணப்பட்டாரென்றும், காலஞ்சென்றவரின் தாயார் ஒரு மாதத்திற்கு முன்பதாக வீட்டிலுள்ள கிணற்றில் விழுந்து காலமானதைத் தொடர்ந்தே இவர் மனவேதனையடைந்திருந்தாரென மரண விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது.

இறந்தவர் உறவினர் ஒருவருக்கு எழுதியகடிதமொன்றில் தான் நஞ்சு குடிப்பதாகவும், யாரையும் சந்தேகிக்க வேண்டாமென்றும் குறிப்பிட்டிருந்தார்.

இறந்தவரின் தந்தையும் சகோதரியும் சாட்சியமளித்தனர்.

தற்கொலையெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

## பௌத்தரை நசுக்க . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சாட்சி ஒப்புக்கொண்டார். இராணுவத்தால் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதாகவும் அவர் சொன்னார்.

காலிக் ஹோட்டலில் மதுபான வெறியிலிருந்த பொழுது பொலிசாரால் தாம் கைதுசெய்யப்பட்டதாகவும் குறுக்குவிசாரணையில் சாட்சி ஒப்புக்கொண்டார். இதற்காக இராணுவத்தால் எச்சரிக்கை செய்யப்பட்டதாகவும் அவர் சொன்னார். ஒரு வீட்டில் பணம் திருடியதாக சந்தேகிக்கப்பட்டு இராணுவ பொலிசாரால் தாம் கைது செய்யப்பட்டதாகவும் அவர் கூறினார்.

வழக்கறிஞர்: உம்மை எங்கே கைதுசெய்தனர்?

சாட்சி: கொழும்பில் எனது வீட்டில்.

வழ: வீட்டில் எந்த இடத்தில்?

சாட்சி: நான் எனது கட்டிலின் கீழ் நித்திரை செய்து கொண்டிருந்தசமயம் கைது செய்யப்பட்டேன்.

நீதிபதி: நீர் இன்னும் இராணுவத்தில்தானா இருக்கிறீர்? உம்மை இராணுவத்திலிருந்து அகற்றுவது பெரும் கஷ்டமாகத்தான் இருக்கும். நீர் உம்மையே எவ்வளவு முட்டாளாக்கிக் கொண்டிருக்கிறீர் என்பதைப்பாரும். பணம் கொடுத்து விலைக்குவாங்கக் கூடிய சாட்சியாக இருக்கிறீரே!

சூதாடியதற்கும் மற்றொரு கோர்ப்பரலின் சேட்டைகளை எடுத்ததற்கும் கைது செய்யப்பட்டதென்பதை சாட்சி மறுத்தார்.

#### குறுக்கு . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பொழுது உடுவில் கற்பக விநாயகர் சனசமூக நிலையத்தின் காரியதரிசியாக விருந்த பாலசிங்கம், கொழும்பு உதவிச் சட்டவைத்திய நிபுணர் டாக்டர் சந்திரா அமர சேகரா, சம்பவம் நடைபெற்றபொழுது யாழ்ப்பாண அரசினர் வைத்தியசாலை அதிகாரிகளுள் ஒருவராகக் கடமையாற்றியவரும் தற்போது அம்பாந்தோட்டை அரசினர் ஆஸ்பத்திரி பிரதம அதிகாரியுமான டாக்டர் ஏ. ரி. நவரத்தினம், சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு அருகாமையில் வசிக்கும் அரசாங்கக் கட்டட நிர்மாண மேற்பார்வையாளருள்ஒருவரான திரு. தி. தர்மரத்தினம், காலஞ்சென்றவரின் இளைய சகோதரனும் குறிப்பிடப்பட்ட சனசமூக நிலையத் தலைவராகவும் 1959 லிருந்து கடமையாற்றியவருமான திரு. சி. சிவபாலசிங்கமும் சாட்சியமளித்தனர்.

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

---

#### தமிழரசு. . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஞர் க. ஆ. பெ. விசுவநாதம் உட்பட பலர் சொற்பொழிவாற்றுவர்.

கலைவாணர் அரங்கில் இரவு 7 மணிக்கு திரு. எஸ். ரி. அரசு தலைமையில் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும்.

#### மூன்றும் நாள் நிகழ்ச்சிகள்

23-ந் திகதி காலை 7 மணிக்கு மாவிட்டபுரத்தில் தியாகிகள் அரங்கில் அரசியல் மகாநாடு திரு. செ. இராஜதுரை தலைமையில் நடைபெறும்,

மாலை 5 மணிக்கு காங்கேசன்துறை பட்டினசபை முன்றலில் அமைக்கப்பட்ட தியாகிகள் அரங்கில் பொதுக்கூட்டம் நடைபெறும். மட்டக்களப்பு எம். பி. திரு. செ. இராசதுரை தலைமையில் நடக்கும் இந்தப் பொதுக்கூட்டத்தில் ராஜாங்கமந்திரி திரு. ஜே. ஆர். ஜெயவர்தன, உள்ளூராட்சி மந்திரி திரு. எம். திருச்செல்வம், தமிழரசுத் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் உட்பட தமிழரசுக்கட்சி எம். பிக்கள், வாலிபமுன்னணியைச் சேர்ந்தவர்கள் உரைநிகழ்த்துவர்.

வழக்கறிஞரின் கேள்விகளுக்கு துவான்சாலி பதிலளிக்கையில் இராணுவ உயர் அதிகாரிகளின் வீடுகளைக் காட்டும்படி எதற்காக தன்னை ஏன் கேட்டீர்களென கோர்ப்பரல் அமரதுங்காவையும் ஹேவகேயையும் கேட்கவில்லையென்று கூறினார். திரு. ஒல்லிகொரியாவைத் தாம் தனது வாழ்நாளில் பார்த்தது இல்லையென்று கூறிய சாட்சி அவருடைய வீட்டைக் காட்டுமாறு அவர்கள் ஏன் தன்னைக் கேட்டார்களென்பது பற்றி தனக்கு இன்னமும் விளங்கவில்லையென்றார்.

நீதிபதி: நறைமுக வழி காட்டியா நீர்? நீர் சிந்திப்பதே இல்லையா? சொன்னதைச் செய்யும் நல்லபோர் வீரனே நீர்!

சுனில் ஹேவகேயோ, அமரதுங்காவோ தம்மை, இராணுவ வீரர்களின் விடுகளைக் காட்டும்படி தன்னைக் கேட்டிருக்கவேண்டிய அவசியம் இல்லையென்றும் சாட்சி கூறினார்.

கேள்விகளுக்கு நேரடியாகவும் உண்மையாகவும் பதிலளிக்கும்படி சாட்சியை நீதிபதி எச்சரித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ...வாடகைபற்றிய முழு ...பரமும் கொடுக்க வேண்டும்

### ...ட்டுச் சொந்தக்காரர்களுக்கு அறிவிப்பு

கொழும்பு, வெள்ளி
...திக வடகை வசூலி ...றுவிட்டு அதன் விபரங் ...ளை தமது வருமான வரி ...த்திரங்களில் வெளியிடத் ...வறும் வீட்டு சொந்தக் ...காரர்களுக்கு எதிராக கடு ...மையான நடவடிக்கை எடு ...க்கப்படும் என்று வாடகைக் கட்டுப்பாட்டு பகுதி ஆணை ...யாளர் திரு. சிற்றம்பலம் அறிவித்திருக்கின்றார்.

...வாடகை அறவிடும் ...து அதன் முழுவிபரங் ...ம் பிரகடனப்படுத்தா ...அது வாடகைக் கட் ...பாட்டுச் சட் ...த்தின்கீழ் குற்றமாகும் ...ன்று அவர் அறிவித்திருக் ...கின்றார்.

...வீட்டு வாடகைகள் ப ...ற உண்மைத் தகவல் ...காதவர்கள் மீது ...தகவல் கொடுத் ...நடவடிக்கை ...தண்டனைக்குட்படு ...டுவர் என்று அறிவிக் ...டுள்ளது.

...திக நிலவாடகை அற ...து அதன் விபரங்களை ...டனப் படுத்தாமல் ...க்கும் நிலச் சொந்தக் ...ன் மீதும் கடும் நட ...கை எடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

## இளம் பெண் தீக்குப் பலி!

உடுப்பிட்டி, வெள்ளி
பரமேஸ்வரி என்ற 16 வயது இளம் பெண் தீவிபத்தொன்றில் சிக்கி பரிதாப மரணத்துக்குள்ளான சம்பவம் இங்கு நடைபெற்றுள்ளது.

நேற்று மத்தியானம் காலஞ் சென்றவர் குசினியில் சமயல் வேலை செய்து கொண்டிருந்ததாகவும், அடுப்புப் பற்றவைப்பதற்காக கைவிளக்கைக் கொளுத்தும் போது தவறி அவளின் ஆடையில் தீ பிடித்துக் கொண்டதாகவும், எரிகாயங்களுடன் உடனடியாக பருத்தித்துறை மத்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதாகவும், பின் ஆஸ்பத்திரியில் மரணமானரெனவும் மரணவிசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

விபத்தினால் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

## கட்டிடக்கலை பற்றிய சர்வதேச மகாநாடு

லண்டன், ஆக 19
சர்வதேச இடைவெளி கட்டிட அமைப்புகள் சம்பந்தமாக இதுவரை நடைபெறாத மாநாடு ஒன்று லண்டன் "பட்டர்ஸி" தொழில் நுட்பக்கல்லூரியில் அடுத்த மாதம் 21-ம் திகதியிலிருந்து 23-ம் திகதி வரை இடம்பெறவிருக்கிறது. 10000க்கும் அதிகமான வெளிநாட்டுப்பிரதிநிதிகள் இம்மாநாட்டில் பங்குபற்றுவர்.

பலரக கட்டிடங்களின் கூட்டமைப்புபற்றிய நவீன நிர்மாண, அமைப்பு முறைகள் இம்மாநாட்டில் பரிசிலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். நீண்ட, குறுகிய கூரை அமைப்புகள், கோபுரங்கள் பாலங்கள், வானொலி தொலைநோக்கிகள், மற்றும் நவீனரக கட்டிடங்கள்பற்று இங்கு ஆராயப்படும்.

அஸ்திரேலியா, பிரான்ஸ், மேற்குஜேர்மனி, ஹங்கேரி, இத்தாலி, ஸ்பானியா, அமெரிக்கா, ஜப்பான், பிரிட்டன் உட்பட 18 நாடுகள் கட்டிட நிர்மாணம் அமைப்பு சம்பந்தமான நவீன கலைமுறைகள்பற்றி ஆராய்ச்சிக்குறிப்புகளை இம்மாநாட்டுக்கு அனுப்பி வைத்திருக்கின்றன.

நவீன கட்டிடக்கலை சம்பந்தமான இருகண்காட்சிகளும் ஒழுங்கு செய்யப்பட்டு வருகின்றன.

## சுங்க இலாகாவினர் பிரதமருடன் சந்திப்பு

கொழும்பு, வெள்ளி
தமது சேவையில் பல வருடங்களாக நிவர்த்திக்கப்படாத குறைபாடுகள் பற்றி நேற்று சுங்க இலாகா உத்தியோகத்தர் சங்கம் பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயக்காவைச் சந்தித்துப் பேசியது.

சுங்க இலாகாவைச் சேர்ந்த வட்டாரங்கள் தெரிவிக்கும் கருத்துப்படி, சுங்க சேவையிலுள்ள நீண்டகால சேவை உத்தியோகத்தர்களை இக்குறைபாடுகள் மனக்கசப்புக்கும், நம்பிக்கையின்மைக்கும் ஆளாக்கியுள்ளனவென்றும், இதன் பயனாக சேவையின் திறமையே பாதிக்கப்படலாமெனவும் தெரிகிறது.

## முத்திரை வாங்க அடிபிடி

லண்டன், ஆக. 19
உதைபந்தாட்டப் போட்டியில் பிரிட்டன் ஈட்டிய வெற்றியை நினைவுகூருமுகமாக வெளியிடப்பட்ட புதிய முத்திரையை வாங்குவதற்கு முத்திரை சேகரிப்போர் இங்கு ஒருவரை ஒருவர் முண்டியடித்துக்கொண்டு, மத்திய லண்டன் தபாற்கந்தோரொன்றின் ஜன்னல் கண்ணாடியும் உடைத்தனர். உடைத்த கண்ணாடி சிதறியதால், ஒருவர் காயமடைந்தார். முத்திரையின் மீது "இங்கிலாந்து - வெற்றிவீரர்" என்ற சொற்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

(பி. டி. ஐ.)

## 'உடலும் உள்ளமும் வளர்ச்சியடைகிறது'

களுவாஞ்சிக்குடி, வெள்ளி
"பாடசாலை மாணவர்கள் விளையாட்டுகளில்பங்குபற்றி வருவதனால் உடலும் உள்ளமும் வளர்ச்சி அடைகிறது" என்று கல்முனை வெஸ்லிக் கல்லூரி வருடாந்த விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து பேசுகையில் மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி ... திரு. பி. ஏ. ஜே. காசிநாதர் கூறினார்.


# பார்க்கர்




**எல்லா பேனைகளுக்கும் உகந்த சிறந்த மை!**

- புதிய பேனைகளை புத்துணர்ச்சி பெறச் செய்கின்றது.
- பழைய பேனைகளை புதிய ஜீவன் பெறச் செய்கின்றது.

...ங்கள் பேனை புதியதோ, பழையதோ, என்ன ரகமோ, என்ன ...யோ - ஆயினும் அதற்கு பார்க்கர் சுப்பர் குயிங்க் மை நிரப்பு ...அத்தியாவசியமே! பேனைகள் எழுத தயங்கினால், ...தித்தால் அது பேனைகளின் குற்றமல்ல; பாவிக்கும் மையின் ...றம்! தரம் குறைந்த மைகள், குழாயில் அடைசலையும் தடங் ...யும் உண்டாக்கி எழுத்து முனையை "வாடச்" செய்கின்றன. இச் ...ப்பங்களில்தான் நீங்கள் சொல்வ் - X உடைய சுப்பர் குயிங்க் ...மையை நிரப்பவேண்டும். உங்கள் பேனையில் சுப்பர் குயிங்கினை ...யுங்கள்! இதிலுள்ள சொல்வ் - X அடைசலை அகற்றி..... ...ம்போதே பேனையை சுத்திகரிக்கும்!

பள்ளிவேலைக்கும், வீட்டுவேலைக்கும் பாவியுங்கள்
கழுவக்கூடிய ரோயல் புளூ

...நிரந்தரமான கந்தோர் ரெக்கார்டுகளுக்குப் பாவியுங்கள்!
பெர்மனன்ட் புளூ, பிளக், புளூ - பௌக், ரெட், கிரீன் மற்றும் டர்குயிஸ் புளூ.

பார்க்கர் பென் கம்பனிக்காகத் தயாரிப்பவர்கள்

**...ராஜேந்திரம்ஸ் லிமிட்டெட்**

வீட்டை நடத்திக்களைத்த அம்மாவுக்கு

# மாமைட்



பட்டிட்டுப் பொட்டிட்டுச் சிறுவர்களை பாடசாலைக்கனுப்பி



வீட்டைக் கூட்டி, ஒழுங்குபடுத்தி



மட்டற்ற சமையல் வேலைகளை நாள்தோறும் செய்து களைத்திருப்பதால்



தேக சுகத்திற்கும் தெம்பிற்கும்
விசேஷமாக அம்மா அருந்துவது மாமைட்

சக்தி மிகுந்த சுகவாழ்வுக்கு உங்கள் தினசரி ஆகாரத்தில் B விட்டமின்கள் அவசியம். அனுதினமும் தேவையான B விட்டமின்கள் அனைத்தையும் கொண்ட ஒரு சிறந்த உணவு மாமைட். வெந்நீரிலோ அல்லது வெந்நீருடன் ஓரிரு சொட்டு எலுமிச்சப் பழச்சாறு கலந்தோ அல்லது தாளித்தோ மாமைட் அருந்தலாம்.






மாவுப் பொருள் சர்க்கரைப் பொருள் அற்ற, B விட்டமின் நிறைந்த, தூய்மையான, ... பொருள்.

629/66


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் சுதந்திரத்திற்கு பொருளாதார மேம்பாடு அவசியம்

## விவசாயிகள் கூட்டத்தில் யாழ். அரசாங்க அதிபர்

சாவகச்சேரி, வியா.

''நமது நாடு சுதந்திரம் அடைந்துவிட்டது, அடைந்தும் கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளிடமிருந்து இலவச மாவைப் பெற்று வாழ்கிறோம். சுதந்திரமடைந்த நாம் மற்ற நாடுகளிடம் உணவுப் பொருட்களை வாங்குவது அவமானம். நாம் பெற்ற அரசியல் சுதந்திரத்தைப் பாதுகாக்க வேண்டுமாயின் பொருளாதார சுதந்திரத்தைப் பெற்றாக வேண்டும். ஆகவே அரசாங்கம் இன்று வகுத்திருக்கும் ஐந்தாண்டுத்திட்டம் வெற்றிபெற ஒவ்வொரு விவசாயியும் அயராது உழைக்க வேண்டும்.''

இவ்வாறு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் நடந்த விவசாய அபிவிருத்தி விழாவில் வடமாகாண அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா தலைமைதாங்கிப் பேசும்போது கூறினர். அவர் மேலும் கூறியதாவது:

இத்தகைய விழா விவசாயிகளை ஊக்குவித்து மேலும் மேலும் கமத்தொழிலை வளர்ச்சியடையச் செய்ய ஊக்குவிக்கும். யுத்தகாலத்திற்கு முன்பும் பின்பும் நாம் எப்படிச் சீவித்தோம் என்பதைச் சற்றுச் சிந்தித்துப் பார்க்க வண்டும். யுத்த காலத்தில் பொருட்கள் மிகவும் விலை கூடியனவாகவும் அரிதாகவும் இருந்தமையால் நாம் உணவுப்பொருளை அபிவிருத்தி செய்ய அல்லும் பகலும் பாடுபடும் வாய்ப்பும் கிடைத்தது. நானுவித முறைகளைக் கையாண்டு நெல்சாகுபடியாவதற்கும் மரவள்ளி, குரக்கன் ஆகிய உபஉணவுப் பொருட்களை அபிவிருத்தி செய்தோம்.

யுத்தம் முடிந்ததும் பர்மா போன்ற தேசங்களிடமிருந்து மலிவாகப் பொருட்களை வாங்க வசதியிருந்ததால் நாம் முயற்சியைவிட்டுச் சோம்பேறிகளாய் இருந்தோம். ஆகவே நாம் விவசாயத்தைப் பெருக்க வேண்டும். வடமாகாண விவசாயிகள் உண்மையில் திறமைசாலிகளும் ஊக்கமுள்ளவர்களுமே. இவர்களைப்பற்றி நான் புகழவில்லை. இங்கு விஜயம்செய்த மகாநாயக்க தேரோவும் பிரதமமந்திரியுமே கூறினர்கள். இப்பேர்ப்பட்ட விவசாயிகள் வாழும் பிரதேசத்திற்கு நான் அதிபராக வரும் வாய்ப்புக் கிடைத்தமைக்கு மகிழ்ச்சி அடைகின்றேன்.

மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி. என். நவரத்தினம், திரு.கே.என். ஜயசீலன், மாவட்ட இருஷிக விஸ்தரிப்பதிகாரி திரு. சே. சபாரத்தினம், கமத்தொழிற்பகுதி உதவி ஆணையாளர் திரு. எம். மதிபாலசிங்கம் கூட்டுறவுப்பகுதி ஆணையாளர் திரு. எஸ். கந்தவனம், மாவட்ட அதிகாரி கிராம அபிவிருத்திசிறுகைத்தொழில் இலாகா, திரு. எஸ். கே. திரவியநாயகம் தென்மராட்சிப்பகுதி விவசாயக் குழுக்களின் சமாசத்தலைவர் ஆகியோரும் பேசினர்கள். மற்றும் இன்னிசை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

---

## காமராஜர்

புதுடில்லி, ஆக. 19

இந்திய காங்கிரஸ் தலைவர் திரு. கு. காமராஜர், நேற்று பிரதமர் இந்திரா காந்தியைச் சந்தித்து தமது வெளிநாட்டு விஜயம் குறித்துப் பேச்சு நடத்தினர்.

---

## கலைவாணி முத்தமிழ் மன்றம்

கொடிகாமம், வெள்ளி

'ஒரு நாட்டில் எல்லாரும் ஒன்று பட்டுழைக்கவும், பண்பாடு, கலாச்சாரம் என்பன விருத்தியடைந்து மக்கள் சமுதாயம் முன்னேறவும் கலையுணர்வு இன்றியமையாதது''

கொடிகாமத்தில் கலைவாணி முத்தமிழ் மன்றத்தை அங்குரார்ப்பணம் செய்து வைக்கும் போது இசைப்புலவர் சு. செல்லத்துரை மேற்கண்டவாறு கூறினர்.

மன்ற உத்தியோகத்தர்களாக கீழ்காணுவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: சி. செல்லத்துரை, உப-தலைவர்: திரு ந குமாரவேலு செயலாளர்: திரு அ. அம்பலவாணபிள்ளை, உப-செயலாளர்: திரு. அ. சுப்பிரமணியம், நிர்வாக சபை உறுப்பினர்கள் திருவாளர்கள் மு வி. சிவஞானேஸ்வரன், பொ பவானந்தன் செ. சைலாயபிள்ளை, க. உ. த்திரநாதன், கு. வீரசிங்கம்.

கொடிகாமம் கிராம முன்னேற்ற சங்க மண்டபத்தில் திரு சி. வேலும்பிள்ளை தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

---

## இளைஞர் விளையாட்டுக் கழகப்போட்டிகள்

அனலைதீவு, வெள்ளி

அனலைதீவு மேற்கு இளைஞர் விளையாட்டுக் கழகத்தினரால் சென்ற திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு திரு. மு. குமாரசாமி தலைமையில் விளையாட்டுப் போட்டியொன்று நடத்தப்பட்டது. விளையாட்டுப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கு புலவர் ஐ. ஆறுமுகம் பரிசில்களை வழங்கினர்.

---

## ''என்னையே தருகிறேன்''

யாழ்ப்பாணம், சனி

''என்னையே தருகிறேன்'' என்னும் சமூக நாடகம் ஒன்றை இலங்கைப் பல்கலைக்கழக கொழும்புத் தமிழ்ச் சங்கத்தினர் இம்மாதம் 30-ம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை யாழ்ப்பாண நகர மண்டபத்தில் நடித்துக் காண்பிக்கவிருக்கின்றனர்.

---

## உதைபந்தாட்டப் போட்டி

யாழ்ப்பாணம், சனி

யாழ். மத்திய கல்லூரியின் 'ரேமயின்' இல்லத்துக்கும் 'வில்ஸ்' இல்லத்துக்குமிடையேநடைபெற்ற சிநேகிதபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் ரேமெயின் இல்லம் 'வில்ஸ்' இல்லத்தை 2—1 கோல்களினுல் தோற்கடித்தது.

இடைவேளையின் போது இரு கோஷ்டிகளும் தலா ஒவ்வொரு கோல்கள் பெற்றிருந்தன இடைவேளையின் பின்னர் ரேமெயின் இல்லத்தைச் சேர்ந்த முன்னணிவீரரான சண்முகவேல் எதிர்பாராதவிதமாக ஒரு கோலைப் பெற்றுக் கொடுத்தார். இப்போட்டி கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

---

சுழிபுர அம்மையார்

## 104-வது வயதில் காலமானர்!

சுழிபுரம், வெள்ளி

சுழிபுரத்தைச் சேர்ந்த சங்கரபபிள்ளை கைம்பெண் ஆச்சிப்பிள்ளை என்பவர் தமது 104-வது வயதில் இருதினங்களுக்கு முன் காலமானர். தமது வாழ்நாளில் சுகயீனமே இல்லாமல் சுகதேகியாக வாழ்ந்த நிம்மதியாகவே காலமானர்.

---

## சைக்கிள் திருடர் ஜாக்கிரதை!

யாழ்ப்பாணம், சனி

நல்லூர் தெற்குப் பகுதியில் சைக்கிள் திருடர்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளது.

கச்சேரிக்கும் நல்லூருக்குமிடையுள்ள பிரதான வீதியில் ஒரு சில நாட்களுக்குள் இரு சைக்கிள்கள் திருடப்பட்டுவிட்டதாகச் சொல்லப்படுகிறது. இப்பகுதியில் உள்ள ஒரு வைத்தியரிடம் மருந்துவாங்கச் சென்ற ஓர் அன்பர் வெளியே சைக்கிளை வைத்துவிட்டுப் பின் திரும்பிவந்து பார்த்தபோது அது காணப்படவில்லையாம்!

ஒருநாள் இரவு ஒரு கடைக்கு அருகாமையில் சைக்கிளைவைத்துவிட்டு நித்திரை செய்த ஒருவர் விழித்தெழுந்து பார்த்தபோது சைக்கிளைக் காணவில்லையாம்! இது பற்றி யாழ்ப்பாணம் பொலிசுக்குப் புகார் செய்யப்பட்டுள்ளது.

---


வடி தொழிலில் 100 வருட அனுபவம்

1860 முதல், சிலோன் புரூவரியின் உன்னத பியர் ரகங்கள் அனைத்தும் நுவரேலியாவில் தயாராகின்றன. வடி தொழில் நிபுணர் குழுவொன்று கையாளும் தேர்ந்த கலவை முறை, ஒவ்வொரு போத்தல் நுவரேலியா பியருக்கும்உன்னத தரமும் சுவையும் தருகிறது.



இயற்கைத் தூய்மை வாய்ந்த நுவரேலியா நீர்

நல்ல பியருக்கு அடிப்படைத் தேவை நல்ல தண்ணீர்...... மிகச் சிறந்த நன்னீர், தேவதாரு விருட்சங்கள் செறிந்த நுவரேலியாக் குன்றுகளிலிருந்து நிர்மலமான, சுகந்தமான, சீதள நிலையிற் கிடைக்கிறது.

8 சர்வ தேச விருதுகள்

தரமும் சுவையும் சிறந்த நுவரேலியா பியர் ரகங்கள், லண்டன் ஒலிம்பியாவில் நிகழ்ந்த 1952, 1957, 1960, 1964-ஆம் வருட உலக வடி தொழிற் காட்சிகளில், 8 உயர் தர விருதுகளைப் பெற்றன. நுவரேலியா பியர் ரகங்களின் சிறப்பு, பரீட்சித்து நிரூபிக்கப்பட்டது.






நுவரேலியா பியர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கத்தை வீழ்த்திவிடுவோம் என்று சார்ஜண்ட் ஹொரந்தமுனி கூறினர்

## சதிவழக்கு விசாரணையில் ராணுவ வீரர் தொடர்ந்து சாட்சியம்

கொழும்பு, வெள்ளி

சதிமுயற்சி வழக்கு விசாரணை இன்று பகல்போசனத்துக்குப் பிறகு ஆரம்பமானபோது இலங்கை ராணுவத்தைச் சேர்ந்த துப்பாக்கி வீரர் எம். டி. ஜி. சேனநாயக்கா முடிக்குரிய வழக்கறிஞர் பெஸில் வைட்டினுல் குறுக்குவிசாரணை செய்யப்டார்.

அவர் கூறியதாவது: ஏழாவது எதிரியான சார்ஜன்ட் ஹொரந்தமுனி பெப்ரவரி 17ந் தேதி அரசாங்கத்தை அவர்கள் எல்லோரும் வீழ்த்தப்போவதாகக் கூறினர். அவர்களிடம் ஆயுதங்கள் இருப்பதாகவும் ராணுவத் தலைமை முகாமைக் கைப் பற்றப்போவதாகவும் கூறினர். ராணுவ மத்தியமுகாமைப் பொறுப்பேற்கும்படி என்னைக் கேட்டார். நான் ஆச்சரியமடைந்தேன். நான் கொலை செய்யப்பட்டால் என்ன நடக்குமென்று நான் அவரிடம் கேட்டேன். இவ் விஷயத்தில் நான் கொலை செய்யப்பட்டால் என் பிள்ளைகளுக்கு நல்ல பெயர் கிடைக்காதென்றும் ஹொரந்தமுனியிடம் கூறினேன். கொடமுனையின் வீட்டில் நடைபெற்ற ஒரு கூட்டத்திலும் நான் கலந்துகொண்டேன். அங்கு 10வது 16வது 19வது 11வது 13வது எதிரிகளும் காணப்பட்டனர். பெப்ரவரி 17ந் தேதி என்னையும் தங்களுடன் சேர்ந்து கொள்ளும்படி ஹொரந்தமுனி கேட்டுக்கொண்ட பின்னரும் அவர் என்னிடம் வந்து அந்த விஷயம் நிறுத்தப்பட்டு விட்டதாகவும், ஏதோ தவறு நடந்துவிட்டதாகவும் கூறினர். என்னை வீட்டுக்குத் திரும்பிப் போகும்படி அவர் சொன்னர். நான் பணுகொடைக்குப் போனேன். சிலதினங்களுக்குப் பின்னர் இந்தக் கதையைச் சார்ஜன்ட் ஆரியதாசாவிடம் கூறினேன். அவர் எனது நல்ல நண்பர்

குறுக்குக் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் தாம் ஆரியதாசாவில் நம்பிக்கை வைத்திருந்ததாகவும் கூறினர்.

மேலும் கூறியதாவது: என்னைத் துப்பறியும் பொலிசாரிடம் அவர் அழைத்துச் சென்ருர். அங்கே என்னை ஏ. எஸ். பி. சுந்தையா விசாரித்தார். விசாரணையின் போது சார்ஜன்ட் ஹொரந்தமுனியின் பெயரை சொல்லி என்னிடம் ஒரு படம் காட்டப்பட்டது. அதற்கு முன்னர் ஹொரந்தமுனியின் பெயரை நான் அறிந்திருக்கவில்லை.

# குறுக்கு விசாரணையில் கேள்விகேட்கும் முறை

## வழக்கறிஞரை நீதியரசர் திருத்தினர்

யாழ்ப்பாணம், வெள்ளி

உடுவில் கொலை வழக்கு வட பகுதி அசைஸ் கோர்ட்டில் இன்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது குறுக்கு விசாரணைக்குச் சாட்சிகள் அளிக்கும் விடையை எதிர் தரப்பு வழக்கறிஞர் அடுத்த கேள்விக்குமுன் மீண்டும் சொல்லும் பழக்கத்தைப் பல முறை கண்டித்துத் திருத்த முயன்ற நீதியரசர் திரு. பொ. ஸ்ரீஸ்கந்தராசா சட்டப்படி அது பிழையென அவ்வழக்கறிஞருக்கு எடுத்துக் கூறினர்.

இவ்வழக்கில் உடுவிலைச் சேர்ந்த இ. குமாரதாசன் அவ்வூரைச் சேர்ந்த சிவகுரு பரராசசிங்கத்தைப் பொல்லால் தாக்கிக் கொலைசெய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார்.

அரசாங்க தரப்பில் வழக்கறிஞர் குமார் அபயநாயக்காவும் எதிரி தரப்பில் திரு. த. குணரத்தினம், திரு. ஏ. ரி. ஜி. பிரிட்டோ ஆகியோரின் அனுசரணையுடன் வழக்கறிஞர் திரு. எம். எஸ். சுந்தரலிங்கம் ஆஜரானர்

சம்பவம் நடைபெற்ற
(5-ம் பக்கம் பார்க்க)

## இன துவேஷி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வும் கூறினர்.

சபையில் ஏற்கனவே டாக்டர் என் எம் பெரேரா பேசியபோது அவசரகால நிலைமையைத் தொடர்ந்து வைத்துக்கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை என்ருர்.

ஆர் ஜி சேனநாயகா பேசியபோது யு என் பி க்கும் தமிழரசுக்கட்சிக்குமிடையில் ஒப்பந்தம் ஒன்று இருப்பதாகவும் அதனைப் பாதுகாக்கவே அவசரகால நிலைமை நீடிக்கப்படுகின்றதென்று குற்றஞ்சாட்டினர்.

அவர் மேலும் பேசியபோது நாங்கள் சிங்களவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக நடிவடிக்கை எடுத்தாலும் அது வகுப்பு துவேஷமென்று கூறப்படுகிறது. ஆனல் வடக்கிலும் கிழக்கிலும் வகுப்புத் துவேஷம் நடைபெறுகின்றது. அதுபற்றி யாரும் கவலைப் படுவதாகத் தெரியவில்லையென்ருர்.

# ‘நாவலர் காட்டிய பாதையில் செல்பவர்’

## குமாரசுவாமிப்புலவர் பாராட்டுவிழாவில் பேச்சு

யாழ்ப்பாணம், சனி

‘இளம்வயதிலிருந்தே சைவசூழலில் வளர்ந்து வந்தவர் குமாரசுவாமிப் புலவர். நாவலர் காட்டிய சமயப்பாதையில் சைவப்பிரசாரஞ் செய்துவருபவர் அவர். அத்தோடு நின்றுவிடாது தமது சொந்தஊரில் ஒரு பாடசாலையை நிறுவிநடத்தி வருகிருர்’ இவ்வாறு நேற்று மாலை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில், ஈழத்திலே கடந்த ஐம்பது ஆண்டுகளாகச் சைவப்பணியும் தமிழ்ப்பணியும் ஆற்றியவருமான திரு த குமாரசாமிப் புலவருக்கு அளிக்கப்பட்ட விழாவில் தலைமைவகித்துப்பேசிய சிவநெறிக் காவலர் திரு த முத்துச்சாமிப்பிள்ளை கூறினர். புலவரின் எழுபதாண்டு நிறைவையொட்டி இப் பாராட்டுவிழா நடத்தப்பட்டது.

வண்ணை சிவன்கோவிலில் இருந்து அலங்கரிக்கப்பட்ட காரில்ஊர்வலமாயழைத்துச் செல்லப்பட்ட புலவர் விழா மண்டபத்தை அடைந்ததும், விபூதி அணிவித்து ஆசிரவதிக்கப்பெற்றபின் சைவாகமமுறைப்படி விழா ஆரம்பமானது.

தலைவர் தொடர்ந்து தமதுரையில் திரு குமாரசுவாமிப்புலவர் இளம்வயதிலிருந்தே இராமாயணம், பாரதம் போன்றவற்றில் மிக்க ஈடுபாடு உடையவராயிருந்தாரென்றும் சிறந்த சைவசீலரான காலஞ்சென்ற சேர். கந்தையா வைத்தியநாதன் இவ்விழாவில்கலந்து கொள ஆசைகொண்குந்தாரென்றும், அவரது எண்ணம் அவர் இருக்கும்போது நிறைவேருது போனது கவலையளிக்கிறதென்றும் குறிப்பிட்ட பின்னர் புலவர் இன்னும் பல்லாண்டு வாழ வேண்டுமெனத் தாம் பிரார்த்திப்பதாகக் கூறினர்

திரு. கே பி ஹரன் புலவரைப் பாராட்டிப் பேசுகையில் அவர் சிவவாழ்வு வாழ்பவரென்றும், சிவபூஜையில் தவருதவரென்றும் கூறினர் புலவர் யோகசுவாமிகள் கட்டளைப்படி சிலகாலம் நாடெங்கும் புராணபடனங்கள் நடாத்தினரென்றும் அவர் மேலும் கூறினர்.

கொழும்பு விவேகானந்த சபையைச் சேர்ந்த திரு. இரா. சபாநாயகம், அனுராதபுரம் விவேகானந்த சபையைச் சேர்ந்த திரு. க. பசுபதிப்பிள்ளை, திருக்கேதீஸ்வர புனருத்தாரண சபையைச் சேர்ந்த திரு. மு. ஞானப்பிரகாசம் மற்றும் வித்துவான் க. இ. நடராஜன், பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, சிவஸ்ரீ கு. பாலசுந்தரக்குருக்கள் ஆகியோரும் பேசினர்.

தலைவர் பொன்னுடை போர்த்தி பொற்கிழி வழங்கியபின்னர் புலவர் தம்மைக் கௌரவித்தமைக்காகச் சைவபரிபாலன சபைக்கும், விழாவில் கலந்துகொண்டவர்களுக்கும்தமது நன்றியைத் தெரிவித்தார்

# ரூ. 10,000 பிணையில் செல்ல எதிரிக்கு அனுமதி

## கிளிநொச்சி சிசு கொலைவழக்கு அடுத்த பருவத்துக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், வெள்ளி

கிளிநொச்சியைச் சேர்ந்த இராசுவின் 9 மாதக்குழந்தை விக்னேஸ்வரனைக் கொலை செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட அவ்வூரைச் சேர்ந்த துரைசாமியின் மனைவி இராசம்மா, அடுத்த பருவ விசாரணைக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டதால் ரூபா 10,000/- பிணையில் செல்ல நீதியரசர் திரு. பொ. ஸ்ரீஸ்கந்தராசா அனுமதி கொடுத்துள்ளார்.

இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபொழுது பிரதம சாட்சியாகவுள்ள கொலை செய்யப்பட்டகுழந்தையின் தாயான செல்லம்மா பிரசவத்திற்குரிய காலத்திலிருப்பதால் கோர்ட்டிற்குச் சமுகமளிக்க வியலாதிருப்பது பற்றி வழக்கறிஞர் திரு. குமார் அபயநாயக்கா நீதியரசரின் கவனத்திற்கு கொண்டுவந்தார். எதிரியின் சார்பில் ஏற்பட்ட வழக்கறிஞர் திரு. வி. என். நவரத்தினம் நீண்ட காலத்திற்கு எதிரி விளக்க மறியலிலிருப்பதால் அன்னரை பிணையில் செல்ல அனுமதிக்கும்படி கோரிய விண்ணப்பத்தை ஏற்று நீதியரசர் திரு. பொ. ஸ்ரீஸ்கந்தராசா வடபகுதி அசைஸின் அடுத்த பருவ விசாரணைக்கு வழக்கை ஒத்திவைத்து எதிரியை ரூபா 10,000/- பிணையில் செல்ல அனுமதி அளித்தார்.

## திருமணம்

ஸ்ரீ விவேகானந்தன் - சீதாதேவி

யாழ். பலநோக்கக் கூட்டுறவு சமாஜ களஞ்சியப் பொறுப்பாளர் திரு. நா. ஸ்ரீ விவேகானந்தனுக்கும் திரு. க. இராமநாதனின் மகள் செல்வி சீதாதேவிக்கும் நாளை (21-8-66) ஞாயிற்றுக்கிழமை இரவு 11-24 மணி தொடக்கம் 12-05 மணி வரையுள்ள சுபவேளையில் யாழ்ப்பாணம் பெருமாள் கோயில் தெற்கு ஒழுங்கை 22-ம் இலக்க, மணமகனில்லத்தில் திருமணம் நடைபெறும். உற்ருர் உறவினரும் நண்பர்களும் சமூகந்தந்து மணமக்களை ஆசிர்வதித்தேகுமாறு மணமகனின் தாயார் திருமதி எஸ். என். சுவாமியும், மணமகளின் பெற்ருேர் திரு. க. இராமநாதனும் பாரியாரும் அன்புடன் அழைக்கின்றனர். 867

## தொழிற்சாலைகளில் கல்லூரி மாணவர்

கொழும்பு, வெள்ளி

தொழிற்சாலைகள்தொழிற்சந்தோர்களின் கல்லூரி மாணவர்கள் செய்முறைப் படிப்பை ஆற்றுவதற்கு எவ்வளவுதூரம் தொழிலதிபர்களும் முதலாளிகளும் வசதி செய்ய முடியுமென்பதை அறியும்பொருட்டு இவர்களுடன் பேச்சு வார்த்தை தொடங்குமாறு கல்வி இலாகா டைரக்டர் திரு. டி. எம். ஹெற்றியாராய்ச்சியைக் கல்வி மந்திரி திரு. இரியகொல்ல பணித்துள்ளார்.

பொதுக்கல்வி, தொழில்நுட்பக்கல்விபற்றிய அடுத்த கல்வி மசோதாவின் பிரகாரம் தொழில்நுட்ப மாணவர்கள் [illegible] தனியார் துறையிலுமுள்ள தொழிற்சாலைகள் [illegible] தொழில் நிலையங்களில் வரு[illegible]ட்ம் இருவாரம் செயல் முறைப்படிப்பை அனுசரிக்க வேண்டுமெனத் தெரிகிறது.

# முன்னள் எம். பி. மீதும் லஞ்சப் புகார்

## அட்டோர்னி ஜெனரல் பரிசீலனை செய்கிருர்

கொழும்பு, வெள்ளி

இப்பொழுது அட்டோர்னி ஜெனரலினுல் பரிசீலிக்கப்பட்டுவரும் லஞ்சப் புகார்களில் முன்னுள் பாராளுமன்ற உறுப்பினர் மீதான புகாரும் ஒன்று மதுவிற்பனை லைசென்ஸ் பெற்றுத் தருவதாக ரூபா 3000 லஞ்சம் பெற்றதாக அவர்மீது புகார் செய்யப்பட்டுள்ளது.

டெண்டர் பெற்றுத் தருவது சம்பந்தமாக லஞ்சம் பெற்றதாக ஒரு பெண் மீதான புகாரும் பரிசீலனையில் இருந்துவருகின்றது.

தற்போது சுமார் 1000 லஞ்சவழக்குகள் தற்போதைய லஞ்சக் கமிஷன் பரிசிலனையில் இருந்துவருகின்றது.

# பருத்தித்துறையிலிருந்து சைக்கிள் ஊர்வலம்

## 500 பேர் கலந்துகொள்வர்

யாழ்ப்பாணம், சனி

பருத்தித்துறை, வல்வெட்டித்துறை ஆகிய இடங்களிலிருந்து தமிழரசுக்கட்சி வாலிபமுன்னணி மகாநாட்டில் கலந்துகொள்வதற்காக சைக்கிள்களில் பவனியாகப் போவதற்கு 500 பேர் தமிழரசுக்கட்சிக் காரியாலயத்தில் பதிவுசெய்திருப்பதாக அறியப்படுகின்றது.

இவர்கள் 22-ம் திகதி காலை ஆறு மணிக்கு பருத்தித்துறையிலிருந்து வல்வெட்டித்துறை வழியாக 8 மணியளவில் பலாலிவிமான நிலையத்தை அடைவர். அங்கு ராஜாங்க மந்திரி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனுவுக்கு அளிக்கப்படும் வரவேற்பு வைபவங்களில் இவர்கள் கலந்துகொள்வார்கள். இந்த ஊர்வலத்துக்கு திரு எம் வேலும்மயிலும் தலைமை வகிப்பார்.

## மரண அறிவித்தல்

### கயிலாயபிள்ளை சின்னத்தம்பி

நீர்ப்பாசன இலாகாவில் முன்பு கடமையாற்றிய திரு. எம். அரசரத்தினத்தின் தந்தையாரும் மலாயன் பென்சனியருமான புன்னலைக்கட்டுவன் தெற்கைச் சேர்ந்த கயிலாயபிள்ளை சின்னத்தம்பி நேற்று (19-8-66) இறைவனடி சேர்ந்தார். இன்று (20-8-66) சனிக்கிழமை காலை 10 மணிக்கு ஈமக்கிரியைகள் நடைபெறும். 872

இப் பத்திரிகை ஈழநாடு லிமிடெட் கொவனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] இல் இருக்கும் அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org